Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 — மலர் 10
போன் 389 — இதழ் 39
National Tamil Daily — தேசிய தினசரி

[illegible] கீலக பங்குனி 7 ஜுல்ஹஜ் 20 புதன்கிழமை (20-3-68)

# மகாவலி கங்கை முதல் கட்ட வேலைகள் 1969-ல் ஆரம்பம்

மருதானை, செவ்வாய் மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் திட்டத்துக்கான முதல் கட்ட வேலைகளைத் தொடங்குவதற்கு உலகநாடுகளில் கோரப்பட்ட கேள்விப் பத்திர காலஎல்லை இவ்வாரம் முடிவடைந்துவிட்டது. இலங்கையுடன் ராஜ்யத் தொடர்பு வைத்திருக்கும் நாடுகளில் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டன.

பல நாடுகளிலிருந்து இதற்கு ஆதரவு கிடைத்திருக்கிறது. முதல்கட்ட வேலைகளைச்செய்து முடிப்பதற்கு பதினெட்டுக் கோடியே பத்து லட்சம் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டு அதற்கான கேள்விப்பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாம்.

முதல் கட்டவேலைக்கான மாதிரி, மதிப்பீடு, திட்டம் ஆகியவையும் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றன.

மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் முழுத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு 200 கோடிரூபாய் செலவாகுமென மதிப்பிடப் பட்டுள்ளது.

(5-ம்பக்கம் பார்க்க)

# இந்திய கடல் விஸ்தரிப்பை இலங்கை ஏற்க முடியாது

## கச்சதீவு பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க முடியும்

### இந்தியாவிலுள்ள இலங்கை தூதர் தெரிவித்த விளக்கம்

சென்னை, மார்ச் 19

'இந்தியா தனது கடல் உரிமைப்பகுதியை விரிவுபடுத்துவதை இலங்கை ஏற்றுக்கொள்ள இயலாததாகும். பாக்குநீரிணைப்பிலுள்ள 20 மைல் தொலைவிலுள்ள தண்ணீரே இரு நாடுகளையும்பிரிக்கிறது. ஆகவே 12 மைல்வரை இந்தியா உரிமை கொண்டாடுவது நடைமுறைக்கு ஒவ்வாததாகும்.

'கச்சதீவு பிரச்னை பற்றி இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதவர் திரு. சிறிபெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:—

இந்தியா ஒரு சார்பாகத் தனது கடல் உரிமைப் பகுதியை 3 மைலிலிருந்து 6 மைலுக்கும், பின்னர் 12 மைலுக்கும் விரிவுபடுத்தியது அனைத்துநாட்டுச் சட்டப்படி ஏற்றுக்கொள்ளமுடியாததாகும். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் 3 மைல் தொலைவுஎல்லையை உடையதாக நடைமுறையில் இருந்

[5-ம் பக்கம் பார்க்க]

## 'கச்சதீவு இராமநாதபுரம் ராஜாவுக்கே சொந்தம்'

### முன்பு நடந்த வழக்கில் இப்படித்தீர்ப்புக் கூறப்பட்டதாம்

'கச்சதீவு பற்றி முன்பு இராமநாதபுரம் ராஜாவுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் வழக்கு நடந்தது கச்சதீவு இராமநாதபுரம் ராஜாவுக்கே சொந்தமென தீர்ப்பு வழங்கப்பட்டது.'

தமிழக கல்வி மந்திரி திரு. இரா நெடுஞ்செழியன் மேற்கண்ட தகவலைதமிழக சட்டசபையில் வெளியிட்டார்.

கச்சதீவில் நடைபெறும் அந்தோனியார் திருவிழாவுக்கு வழக்கம்போல், படகுகளில் செல்லும் யாத்திரிகர்களுக்கு பாதுகாப்புஅளிப்பதுபற்றி மத்திய அரசாங்கத்திடம் கேட்கவேண்டுமென சட்டசபையில் திரு. சிமைச்சாமி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

இந்த வருடம் கச்சதீவில் ஆக்கிரமிப்பு காரணமாக திருவிழாவுக்குச் செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இத் தீர்மானத்தையிட்டு மந்திரிதிரு. நெடுஞ்செழியன் மேலும் கூறியதாவது:— கச்சதீவு பற்றிய வழக்குத் தீர்ப்பை தருவதாக இராமநாதபுரம் ராஜா கூறியிருக்கிறார். அத்தீர்ப்பை மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பத் தீர்மானித்திருக்கிறோம். இது பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது

## தம்பி திருமணத்தை விரும்பாத அண்ணன் தற்கொலை

உடுப்பிட்டி, செவ்வாய் தனது தம்பி திருமணம் செய்ததை விரும்பாத அண்ணன் தற்கொலைசெய்தார். இப்பரிதாப சம்பவம் புலோலி மேற்கு வாணக்குடிருப்பு என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது.

கட்டிடத் தொழிலாளியான சின்னத்தம்பி கந்ததா [வயது 28] என்னும் இளைஞரே இச்சோக முடிவுக்குள்ளானவர் ஆவர்.

காலஞ்சென்றவர் தன்னுடையதம்பியார் ஒரு பெண்ணைக்காதலித்ததை விரும்பவில்லை பெண்ணும் அப்பெண்ணை விவாகம் செய்ய வேண்டாமென்று [illegible] தம்பியைத் தடுத்ததாகவும் பலதடவைகள் [illegible]

[5-ம் பக்கம் பார்க்க]

## இ. போ. ச. ஊழியர் 5 மணி நேர வேலைநிறுத்தம்

நல்லூர், புதன் யாழ்ப்பாணத்திலுள்ள 6 இ. போ. ச. தொழிற்சங்கங்களை சேர்ந்தஊழியர்கள் நேற்று காலை திடீர்வேலை நிறுத்தத்திலிறங்கினர் பின்னர் வடபிரதேச முகாமையாளருக்கும் பிரதிநிதிகளுக்குமிடையே ஏற்பட்ட சுமுகமான முடிவைத் தொடர்ந்து இந்த ஊழியர்கள்சுமார் 5 மணி நேரத்தின்பின்வேலைக்குத் திரும்பினர்.

இந்த வேலைநிறுத்தத்தால் [illegible]

(5-ம் பக்கம் பார்க்க)

## பொதுவேலைநிறுத்தம்

### சி. எம். யு முன்னறிவித்தல்

கொழும்பு, செவ். இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் பொதுவேலைநிறுத்தம் ஒன்றை நடத்துவதற்கு முதலாளிமார் சம்மேளனத்துக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளது.

துறைமுகத்தில் தற்போது எழுந்துள்ள பிரச்னைகளை சுமுகமாகத் தீர்த்துவைக்க அரசாங்கம் தவறினால் பொது வேலைநிறுத்தத்தில் இறங்குவதென வர்த்தக ஊழியர்கள் முடிவுசெய்துள்ளனர். திருகோணமலை துறைமுக ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு அளிக்குமுகமாக கொழும்புத்துறைமுகத்திலும் வர்த்தக ஊழியர் சங்கத்தினர் வேலைநிறுத்தம் மேற்கொண்டுள்ளனர். இந்த வேலைநிறுத்தத்தை முறியடிக்க வேறு ஆட்களை கொண்டுவரப்பட்டால் உடனடியாக பொதுவேலைநிறுத்தம் மேற்கொள்ள வர்த்தக ஊழியர் சங்கத்தினர் முடிவுசெய்துள்ளனர்.

## யாழ்ப்பாணம் வருகிறார்கள்

யாழ்ப்பாணம், புதன் சென்னை மாம்பாக்கம்குருகுலத்தலைவர் தவத்திரு அழகரடிகளாரும் (பேராசிரியர் இளவழகனார்) குருகுல அடியார்களும் இம் மாதம் 22-ம் திகதி யாழ்ப்பாணம்வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை, கண்டி, நாவலப்பிட்டி, கதிர்காமம், கொழும்பு, முனீஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய இடங்களுக்குச் சென்றபின் யாழ்ப்பாணத்தில் [illegible] மெய்கண்டார்கழக ஆதரவில் பெரியபுராணம் திரு

(5-ம் பக்கம் பார்க்க)

கொழும்பு ரயில் நிலையத்தில்

## யாழ்ப்பாண பிரயாணிகள் பொதிகள் பரிசோதனை

கொம்பனித்தெரு, செவ் கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்தில்யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பிரயாணிகளின் பொதிகளைப் பொலிசார் திடீர் பரிசோதனை செய்து வருகின்றார்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து கள்ளக்கடத்தல் பொருட்கள் கடத்தப்பட்டு வருவதாக சந்தேகிக்கப் படுவதாலேயேஇவ்விதம் பரிசோதனை நடத்துகிறார்களாம்

இலங்கை
கடற்றொழில் கூட்டுத்தாபனம்

மயிலிட்டிக் கிராமத்துக்கருகே கல்லுக்கிண்டி எடுக்கக்கூடிய [Hard Lime-Stone Quarry] அரை ஏக்கர் விஸ்திரணமுள்ள காணி ஒன்று வாடகைக்கோ, குத்தகைக்கோ, விலைக்கு வாங்குவதற்கோ தேவை.

மனேஜர், துறைமுக அபிவிருத்திப் பகுதியும், சிவில் என்ஜினியரிங் பகுதியும்.

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்
காலிமுகம், கொழும்பு-3.
495

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## கல்வி

**இசைவகுப்பு:**
எக்கோடியன்—கிட்டார், மிருதங்கம், மெண்டோலின் முதலிய வாத்தியபயிற்சி அளிக்கப்பெறும். நாதன் மியூசிக்கல் ஸ்ரோர்ஸ், 88, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1602

## தேவை

**மனேஜர்:**
எமது அச்சகத்தில் கடமை யாற்றுவதற்கு மனேஜர் தேவை. பிணைப்பணம் கட்டவேண்டும். நேரில் சமுகந்தரவும். இலங்கை நாயகி அச்சகம், பருத்தித்துறை வீதி. [நல்லூர் மாக்கட்], யாழ்ப்பாணம். 1623

**மனேச்சர்**
ஆங்கில அறிவுடையமனேச்சர் ஒருவரும் கன்வசர் இருவரும் அனுபவம் படிப்பு முதலிய முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் ஆதனப்பிணை அல்லது ரொக்கப் பிணை கட்டக் கூடியவர்கள் விரும்பத்தக்கது. விளம்பர இல. 1626 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1626

**தையல் வேலை**
தையல் வேலையில் அனுபவம் வாய்ந்த பெண்கள் ஒராதம் பார்த்து எடுக்கப்படும். 21. 3. 68 காலை 9. 00 மணிக்கு நேரில் வரவும். சென். செபஸ்ரியான் மேல்மாடி பேசன் காமன்ஸ் இல. 18 பெரியகடை. யாழ்ப்பாணம். 1624

**நெசவாளர்:**
அனுபவம் வாய்ந்தபெண் நெசவாளர்கள் தேவை. விடுதி வசதிகளுமுண்டு. நேரில் சமுகம் கொடுக்கவும். உமா வீவேர்ஸ், 244, நாவலர்வீதி, ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். 1625

## விற்பனைக்கு

**டிராக்டர்**
புதிய 25 ஸ்ரீ 3426 பெரிய பியட் டீசல் டிராக்டர், பெட்டியுடனும், மற்றும் சிறு கலப்பை, மோல்போட், டிஸ்க் கலப்பைகளுடனும் உடனடி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு பூனஸ், 71, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். 1621

**காணி**
கொக்குவில் கிழக்கு ஆடியபாதர் வீதியில் இருக்கும் மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு. கீழ் உள்ள விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். ச. சின்னத்துரை, ரயில்ரேட், கொக்குவில். 1622

**லொறி:**
Ford V 8 லொறி C.E5729 மூன்று பக்கத்தால் திறக்கக் கூடியது. மிகவும் மலிவான விலைக்கு விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு கீழ் காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். வி. சயாரத்தினம். இளைப்பாறிய ஒவசியர், 50, சந்தை குறுக்குவீதி, காங்கேசன்துறை. 1616

**நெல்வயல், தென்னந்தோட்டம்:**
யாழ்ப்பாணம் அரியாலை விளையாட்டு மைதானத்திற்கு அண்மையிலுள்ள 'செம்மணிவயல்' என்னும் பெயருடைய நெல்வயல் 50 பரப்பும், 'சிறுத்தோப்பு' என்ற பெயருடைய 10 பரப்புத் தென்னங் காணியும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். திரு. எம். ஆர். இராஜசிங்கம், 326/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1800

# 'மக்கள் வங்கிக்கிளை சாவகச்சேரிக்கு வேண்டும்'

யாழ்ப்பாணம், புதன்
மக்கள் வங்கி இவ்வளவு காலத்திலும் சாவகச்சேரியில் ஓர் கிளைஸ்தாபனத்தை ஸ்தாபிக்கவில்லை. இதனால் எத்தனையோ விவசாயிகளும் மற்றும் கைத்தொழிலாளர்களும் கஷ்டப்படுகின்றனர். ஆகவே கூடிய விரைவில் ஒரு கிளை ஸ்தாபனம் நிறுவ மந்திரியையும், மக்கள் வங்கி தலைவரையும் இச்சபை கோருகிறது.

இன்று நடைபெறும் சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த கூட்டத்தில் 10-ம் வட்டார உறுப்பினர் திரு. என். கே. தர்மலிங்கம் மேற்கண்ட பிரேரணையை சமர்ப்பிப்பார்.

திரு. எஸ். கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் சாவகச்சேரியில் உத்தரவாதம்பெற்ற சாராயத்தவறணை ஒன்றைத் திறப்பதற்கு மந்திரியிடம் அனுமதி கோரும் பிரேரணை ஒன்றும் வருகிறது.

சாவகச்சேரி பஸ் நிலையத்தை விஸ்தரிப்பதுடன் பிரயாணிகள் தங்குமிடமும், ஒழுங்குமுறையும் மலசல கூடமும் அமைக்க வேண்டுமன் பிரேரணையை, 6-ம் வட்டார உறுப்பினர் திரு. க. மயில்வாகனம் சமர்ப்பித்தார்.

# நுளம்புகளை மலடாக்க இங்கு ஆராய்ச்சி

## யானைக்கால் நோயைத்தடுக்கத்திட்டம்

யாழ்ப்பாணம், புதன்
இலங்கையின் சில பகுதிகளில் தீவிரமாகப் பரவி வரும் யானைக்கால் நோயை தடுக்க ஆண் நுளம்புகளை மலடாக்குவதுபற்றி சர்வதேச அணுசக்தி ஸ்தாபனம் ஆராய்ந்து வருகின்றது. டாக்டர் கே. எஸ். ராய் நடாத்தும் இந்த ஆராய்ச்சிக்கான முன்னோடித திட்டமொன்று இங்கு அமைக்கப் படவிருக்கின்றது.

உலக சுகாதார ஸ்தாபனம் அண்மையில் செய்த மதிப்பீடுகளில் இங்கு யானைக்கால் நோய் உள்நாடுகளிலும் பரந்து தொடங்கியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாத்தறையிலிருந்து நீர்கொழும்பு வரையுள்ள பிரதேசங்களில் மட்டும் இருந்த யானைக்கால் நோய் இப்போது கண்டிப் பல்கலைக் கழகம் குருநாகல், இரத்தினபுரி போன்ற இடங்களிலும் பரவத் தொடங்கியுள்ளது தெரியவந்துள்ளது.

இதனைத் தடுப்பதற்கான தடுப்பு இயக்கங்கள் தற்போது களுத்துறையிலும், மாத்தறையிலும் நிறுவப்பட்டுள்ளன. ஆண் நுளம்புகளை மலடாக்கி, இதன் விருத்தியை ஒழிப்பதன் மூலம் யானைக்கால் நோயை முற்றாக அழிக்கலாமென சுகாதாரப் பகுதியினர் எதிர்பார்க்கின்றனர்.

(கா. நி.)

# கத்தியைப் பொலிஸார் கைப்பற்றினர்

யாழ்ப்பாணம், புதன்
இளவாலையில் நடைபெற்ற கொலைசம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் கத்தியொன்றைப் பொலிசார் கைப்பற்றினர். இவ்வாரம் இங்கு நடைபெற்ற இச் சம்பவத்தில் சின்னப்பொடி என்பவர் ஸ்தலத்திலேயே வெட்டிக்கொலை செய்யப்பட்டிருந்தார்.

பொலிசார் நடத்திய விசாரணையில் ஆடுவெட்டப் பாவிக்கப்படும் கத்தியொன்று கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் இன்னமும் கைது செய்யப்படவில்லை.

[கா. நி.]

## யாழ். நெசவு உரிமையாளர் சங்க விசேட பொதுக் கூட்டம்

இடம்: அன்பு பாலர் பாடசாலை, 330, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

காலம்: 21-3-68 பி. ப. 3 மணி. சங்க விதிமுறைகளை அங்கீகரித்தலும் உத்தியோகத்தர் தெரிவும், வேறு பல முக்கியமான நிகழ்ச்சிகளும் இடம்பெறும் நெசவு உரிமையாளர் அனைவரும் சமுகம்தந்து சங்கத்தைப் பலப்படுத்திப் பயன் பெறுமாறு வேண்டுகிறோம்.

மா. சு. குணராசா,
தற்காலிக செயலாளர்.
499

## அடைவு நகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் 91 கஸ்தூரியார் ரோட் "சந்திரா" அடைவு நிலையத்தில் 1-1-65 தொடக்கம் 1-1-67 முன் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவை 8-4-68 திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி நிலையத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
483 ஏல விற்பனவாளர்.

# 'இல்லை என்பதே பேச்சு'

புன்னாலைக்கட்டுவன், செவ்
"இலங்கையின் எந்தப்பகுதியிலும் இல்லையென்ற கூக்குரலைத்தான் இன்று கேட்கலாம். இருக்கிறதென்ற குரலைக் கேட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இதுதான் ஏழு கட்சி ஆட்சியின் மகத்தான சாதனையாகும்."

இவ்வாறு இன்றைய அரசாங்கத்தின் பொருளாதாரக்கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக உரும்பராய் சந்தை மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய வண. உணவட்டுண குணரத்ன தேரோ கூறினார். திரு. எஸ். இராசையா தலைமை வகித்தார்.


இலங்கை குடும்ப நலச் சங்கம்
ஒழுங்கு செய்துள்ள

# பொருட்காட்சி

## கருத்தரங்கு — பொதுக்கூட்டம்

21-3-68 தொடக்கம் 22-3-68 வரை
யாழ்ப்பாணம், சரி. யோவான் கல்லூரி மண்டபத்தில்
நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

**21-3-68:**

பி. ப. 3 மணி: குடும்ப நலம் பற்றிய பொருட் காட்சியை
திருமதி ராம ராவ் [தலைவர் I. P. P. F] அவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள்

பி. ப. 3-30 மணி முதல் பி. ப. 5-30 மணி வரை:
குடும்பநலம் பற்றிய கருத்தரங்கம்

மாலை 6 மணி: பொதுக் கூட்டம்
தலைவர்: திரு. வேணன் அபயசேகரா [யாழ். அரசாங்க அதிபர்]

பேச்சாளர்கள்:
1. டாக்டர் S. இராசரத்தினம் [யாழ். சுகாதாரசேவை அதிகாரி] அவர்கள்
2. திருமதி ராமுராவ் [தலைவர் I. P. P. F.] அவர்கள்
3. டாக்டர் R. P. குனவால [கு. ந. ச. இந்தியா] அவர்கள்
4. டாக்டர் [திருமதி] சறீனு பகலீபாய் [கு. ந. ச. பாகிஸ்தான்] அவர்கள்
5. கௌரவ [திருமதி] சுசிலா தாபா [கு. ந. ச. நேபாளம்] அவர்கள்
6. டாக்டர் கபசர் அசீஸ் [சுகாதாரப் பகுதி குழந்தைகள் பராமரிப்பு ஆலோசகர், காபுல், ஆப்கானிஸ்தான்] அவர்கள்

இரவு 7-30 மணி: படக்காட்சி

எல்லோரும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்
கட்டணம் இல்லை. 497 நிர்வாகசபை.



87வது தினம்!
**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
**காவல்காரன்**

2-வது மாதம்
**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30
எஸ். எஸ். ஆர். - தேவிகா நடித்த
**மறக்க முடியுமா?**

**MANOHARA**
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45 p.m.
JERRY LEWIS
in
**WHO IS MINDING THE STORE**

**REGAL** JAFFNA
Daily at
4-40, -700, & 9-45 p.m
Guystock Well, Telly Savalas
in
**BEAU GESTE**
(Audits - in Technicolor)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
இங்ஸ்லி [கொழும்பு] — பிளாஸா [வெள்ளவத்தை] — வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்] — ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] — விஜிதா [ஹட்டன்]



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
[மற்றும் பலர் நடிக்கும்
**சரஸ்வதி சபதம்**
(ஈஸ்ட்மென் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க

# வியட்னும் போர்க் கொள்கைக்கு செனேட்டர் கென்னடி கண்டனம்

வாஷிங்டன், மார்ச் 19

**வியட்னும் போர் சம்பந்தமாக ஜோன்ஸன் நிர்வாகம் கடைப்பிடித்துவரும் கொள்கையை ஜனுதிபதித் தேர்தலுக்கு நிற்கப்போவதாகத் தீர்மானித்துள்ள செனேட்டர் றெபேர்ட் கென்னடி கண்டித்துள்ளார்.**

வட வியட்னும் மீதான குண்டு வீச்சை நிறுத்துவதுடன், வியட்கொங்கியருக்குத் தென் வியட்னும் அரசியலில் இடமளிக்கும் வகையில் அவர்களுடன் பேச்சுவார்த்தைகளும் நடாத்த வேண்டுமென்று திரு. கென்னடி கூறினுர்.

வியட்னுமில் சமரசம் காண்பதற்கு ஜோன்ஸன் நிர்வாகம் முயற்சிசெய்வதாகத் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஜோன்சன் பதிலடி

இதற்கிடையில், மின்னேஸா என்னுமிடத்தில் நேற்றுப் பேசுகையில், வியட்னுமில் வெற்றியீட்ட அமெரிக்க நாடு முழு முயற்சியும் எடுக்கத் தயாராக வேண்டுமென ஜனுதிபதி திரு. ஜோன்ஸன் கேட்டுக்கொண்டார்.

வியட்னும் போர்க் கொள்கையைப் பிரயோசனமற்ற முறையில் சிலர் விமர்சித்து வருவதாகவும் திரு. ஜோன்ஸன் கூறினுர். அவர் திரு. றெபேர்ட் கென்னடியை மனதில்வைத்துக்கொண்டே இவ்விதம் கூறினுர் என அரசியல் வட்டாரங்கள் கருதின.

பிரிட்டனில்

## போரை எதிர்த்து மாணவர் உண்ணுவிரதம்

லண்டன், மார்ச் 19

பிரிட்டனில் சசெக்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 600 மாணவர்களும் மற்றும் ஆசிரியர்களும், வியட்னும் போரை எதிர்த்து உண்ணுவிரத வேலைநிறுத்தம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இந்த உண்ணுவிரதம் நேற்று ஆரம்பமாகியது. தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## பஞ்சாப் அசெம்பிளியில் பலத்த குழப்பம்

சண்டிகார், மார்ச் 19.

பஞ்சாப் அசெம்பிளியில் நேற்றுப் பெரிய குழப்பமேற்பட்டது.

சபையைக் கூட்டும் கவர்னரின் கட்டளை செல்லுபடியாகாதென்று சபாநாயகர் தீர்ப்பைக் கூறிவிட்டு சபையினின்றும் வெளியேறினுர். எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் அவருடன் கூடவே சென்றனர்.

ஆனல், சபை நடவடிக்கைகள், உதவி சபாநாயகரின் தலைமையின் கீழ் தொடர்ந்து நடைபெற்றன.

பிரதமருக்கும், ராஷ்டிரபதிக்கும் அனுப்பியுள்ள தந்தியில், எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் சபைக்குள் வைத்துப் பொலிசாரின் தாக்குதலுக்குள்ளாகியதாகச் சபாநாயகர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆனல் ஆளுங்கட்சியினரோ சபாநாயகரின் தீர்ப்புச் செல்லுபடியாகாதென்று தெரிவித்துள்ளனர்.

## தங்கச்சந்தை நிலைமை அபிவிருத்தி அடைகிறது

### வாஷிங்டன் முடிவின் எதிரொலி

வாஷிங்டன், மார்ச் 19

தங்கச் சந்தையை இரு கூருகப் பிரிப்பது என இங்கு கூடிய ஐரோப்பிய தங்கக் கூட்டு நாடுகள் செய்த முடிவைத் தொடர்ந்து, உலக தங்கச்சந்தை ஆறுதலடைந்துள்ளது.

தங்க விலைகள் வீழ்ந்துள்ளதுடன், டொலரின் பெறுமதி பலப்படுத்தப்பட்டுள்ளது.

லண்டன் தங்கச் சந்தை மூடப்பட்டே இருக்கிறது. இப்போது பவுணின் பெறுமதியும் உயர்ந்துள்ளது.

**பிரான்சும் ரஷ்யாவும்**

தங்கக் கூட்டு நாடுகளின் ஒழுங்கினுல் டொலரின் பெறுமதியை அதிகரிக்க முடியாது என்று பிரெஞ்சுப் பொருளாதார நிபுணர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்கக் கூட்டு நாடுகளின் திட்டம் இறுதியில் தோல்வியேயடையும் என்று ரஷ்யப் பத்திரிகையான 'இஸ்வெஸ்டியா' கருத்து வெளியிட்டுள்ளது.

**பொதுச் சந்தை நாடுகள்**

இதற்கிடையில், ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகள் பிரஸ்ஸல்ஸில் கூடியுள்ளன. சர்வதேச நாணய முறையில் செய்யப்படும் மாற்றங்கள் சம்பந்தமாகப் பொதுச் சந்தையில் அங்கத்துவம் வகிக்கும் மற்றைய நாடுகளின் கொள்கைக்கு பிரான்சின் இசைவையும் பெற இக் கூட்டம் முயற்சிக்கிறதெனத் தெரிகிறது.

### 27 பேர் பலி

புதுடில்லி, மார்ச் 18

இமாலயப் பிரதேசத்தில் பஸ்ஒன்று உருண்டு ஆற்றினுள் [illegible] தால் 27 பேர் மாண்டனர். 4 பேர் [illegible] மடைந்தார்கள்.

## கெய்ஸாண் மீது தாக்குதல்

சைகோன், மார்ச் 19

அமெரிக்க இராணுவத் தளமான கெய்ஸான் வியட்கொங்கியரின் தாக்குதலுக்கு நேற்று இலக்காகியதாகவும் அத்தாக்குதலைத் தாம் முறியடித்து விட்டதாகவும் அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் இங்கு தெரிவித்தன.

## அலஹபாத்தில் நிலைமை மாமூல்

அலஹபாத், மார்ச் 19

அலஹபாத்தில் அண்மையில் நடைபெற்ற கலவரங்களைத் தொடர்ந்து இப்போது நிலைமை மாமூலுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது.

ஊரடங்குச் சட்டமும் ஓரளவு தளர்த்தப் பட்டுள்ளது.

சீனுவில்

## 400 செங்காவலர் இறந்தனர்

பீக்கிங், மார்ச் 19

சீனுவில், கொங்ஸி மாகாணத்தில் செங்காவலர் படையைச் சேர்ந்த இரு பிரிவினர் சண்டையிட்டதன் விளைவாக 400 பேர் கொல்லப்பட்டனர் எனச் செய்திகள் கூறுகின்றன.

## உ. பி. சம்யுக்த தளத் தலைவர்

லக்னே, மார்ச் 19

உத்தரப் பிரதேசத்தில், சம்யுக்த தளத்தின் தலைவராகத் திரு. ஹரிச்சந்திரசிங் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## கல்கத்தா நிலவரம்

கல்கத்தா, மார்ச் 16

கல்கத்தாவில் சில தினங்களுக்குமுன் நடைபெற்ற கலவரங்களைத் தொடர்ந்து இப்போது அங்கு அமைதி நிலவுகிறது. என்றாலும், நிலைமை பரபரப்பாகவே உள்ளது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் நேற்று அமைதியான ஊர்வலங்களை நடத்தினர்.

# பீஹார் அரசாங்கம் பதவி இழந்தது

பட்னு, மார்ச் 19

பீஹார் அரசாங்கம் வீழ்ந்துவிட்டது. ஆளும் கட்சி மீது பீஹார் அசெம்பிளியில் நேற்றுக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியதன் விளைவாக, ஆளுங்கட்சி பதவியிலிருந்து ராஜினுமாச் செய்தது.

பீஹார் அரசியற் கட்சிகளின் தலைவர்களைக் கவர்னர் தம்முடன் பேச்சுவார்த்தைகள் நடத்த அழைத்துள்ளார்.

## ரொடீஷிய - ஸாம்பிய எல்லையில் சண்டை

சாலிஸ்பரி, மார்ச் 19

ரொடீஷியா—ஸாம்பிய எல்லையில், ரொடீஷிய பாதுகாப்புப் படைகளுக்கும் ஆபிரிக்கத் தேசியவாதிகளுக்குமிடையே சண்டை ஏற்பட்டுள்ளது.

இச்சண்டையில் 9 தேசியவாதிகளும் ஒரு ரொடீஷியப் போர் வீரரும் கொல்லப்பட்டதாக ரொடீஷிய வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனல் ஆபிரிக்க தேசியவாதிகளின் பேச்சாளர் ஒருவர். 7 ரொடீஷியப் போர் வீரரும், 3 ஆபிரிக்கரும் கொல்லப்பட்டதாகக் கூறியுள்ளார்.

### பயிற்சிபெற்றுத் திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம், புதன்

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையைச் சேர்ந்த வடிவேலு சிவஞானம், இரத்தினராசா மகேஸ்வரன் ஆகிய இருவரும், தமிழ்நாட்டிலுள்ள மேட்டூர் ரசாயன தொழிற்சாலையில் கயிற்றே குளோறிக் அமிலம் உற்பத்தியில் பயிற்சி பெற்று நாளை இலங்கை திரும்புகின்றனர்.

இவர்கள் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையில் புதிதாக நிறுவியுள்ள கயிற்ரே குளோறிக் அமிலம் உற்பத்திப்பகுதியில் கடமையாற்றுவார்கள்.

## சைப்பிரஸில் ஐ. நா. சமாதானப் படை மேலும் 3 மாதம் நீடிக்கப்படும்

நியூயோர்க், மார்ச் 19

சைப்பிரஸில் நிறுவப்பட்டுள்ள ஐ. நா. சமாதானப் படையை மேலும் 3 மாதங்களுக்கு அங்கு நீடிப்பது என்று ஐ. நா. பந்தோபஸ்துசபை முடிவு செய்துள்ளது.

சமாதானப்படையின் கால கெடுவை 3 மாதங்களுக்கு இன்னும் நீடிக்குமாறு ஐ. நா. பொதுக்காரியதரிசி யூ தாண்ட் அண்மையில் சபையைக் கோரியிருந்தார்.

### இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த திரு. எம். எஸ். எம். அப்துல் றகீம் அடுத்த முதலாம் திகதி முதல் மன்னர் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார். [கா. தி]

சைகோனில்

## சொந்த துருப்புகள் மீது அமெரிக்க விமானம் தாக்குதல்

### 7 பேர் மாண்டனர்

சைகோன், மார்ச், 19

அமெரிக்க விமானங்கள் வடவியட்னும் இலக்குகள் மீது நேற்றுத் தொடர்ந்து தாக்குதல் நடத்தின.

நேற்றுசைகோனில் அமெரிக்க விமானமொன்று தவறுதலாகத் தனது சொந்தத் துருப்புக்கள் மீதே குண்டு போடப்பட்டதன் விளைவாக 7பேர் கொல்லப்பட்டனர். மற்றும் 29 பேர் காயமடைந்தனர்.

**புதிய விமானங்கள்**

இதற்கிடையில் வியட்னுமில் உபயோகிக்கவென 6 புதிய அமெரிக்க 'ஜெட்' விமானங்கள் தாய்லாந்திலுள்ள அமெரிக்க விமானத்தளத்தை வந்தடைந்துள்ளன.

இந்த விமானங்கள் புகார்களினூடாகவும் இருட்டிலுங் கூட இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

4-வது கிரிக்கெட் டெஸ்ட்

# இங்கிலாந்து 1-வது இன்னிங்ஸ்: 404

## மேற்கிந்திய வீரர் புச்சரின் அபார பந்து வீச்சு

### 5 விக்கெட்களை வீழ்த்தினுர்

போர்ட் ஒவ் ஸ்பெயின், மார்ச்19

இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியாவுக்குமிடையேயான நான்காவது கிரிக்கட் 'டெஸ்ட்' விளையாட்டின் நான்காவது நாளாகிய நேற்று, ஆட்ட இறுதியில் இங்கிலாந்து தனது முதலாவது இன்னிங்ஸில் 404 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. [illegible] மேற்கிந்தியா, விக்கட் நஷ்டமின்றி 6 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அது தனது முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கட் நஷ்டத்திற்கு 526 ஓட்டங்கள் எடுத்திருந்தது வாசகர்கள் அறிந்ததே.

இங்கிலாந்தின் முதலாவது இன்னிங்ஸில், காப்டன் கவுட்ரி அபாரமாக ஆடி, 148 ஓட்டங்களை அடித்தார். ஆட்ட இறுதியில், னுக் என்ற இங்கிலாந்தின் துடுப்படி வீரர், 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

ஒரு கட்டத்தில், இங்கிலாந்து தனது முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட் நஷ்டத்திற்கு 373 ஓட்டங்களை எடுத்து, ஒரு பெரிய தொகையை ஈட்டும்போல இருந்தது.

ஆனல், இந்த நம்பிக்கையை மேற்கிந்திய பந்து வீச்சு வீரரான பேஸிங் புச்சர் சிதறடித்துவிட்டார். அந்தக் கட்டத்தில் வந்து அபாரமாகப் பந்து வீசிய அவர், 3 'ஓவர்'களில் ஆக 5 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 4 விக்கெட்டுகளைப் 'பட்பட்'டென்று வீழ்த்தினுர். இறுதியில், அவர் 34 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 5 விக்கெட்களை எடுத்திருந்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சத்தியம் என்கின்ற வலுவான அத்திபாரத்தின் மேல்தான் உலகம் நிற்கிறது. அசத்தியம் என்பது இல்லாதது. ஆகையால் அதன் வெற்றிக்கு இடமேயில்லை. சத்தியம் நிலைநிற்பது. ஆகையால் அதை அழிக்கவே முடியாது.

— காந்திமகான்

ஈழநாடு

Nationa! National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 7ம் திகதி [20-3-68]

## இலக்கிய வளர்ச்சி

இலங்கையிலுள்ள எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்புக்களை நூல் வடிவில் வெளியிடுவதற்கு ஒரு ஸ்தாபனம் மிக அவசியமென்றும் இந்நாட்டின் எழுத்தாளர் அனைவரும் சேர்ந்து கூட்டாக இத்தகைய ஸ்தாபனம் ஒன்றை உருவாக்குவது நல்லதென்றும் இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. சொ. செல்வநாயகம் கண்டியில் நடைபெற்ற நூல்வெளியீட்டு விழா வொன்றின் பேசுகையில் தெரிவித்த யோசனை இந்நாட்டு எழுத்தாளர்களினது சிந்தனையையும் நல்ல இலக்கியம் வளரவேண்டுமென விரும்பும் அனைவரினது சிந்தனையையும் தூண்ட உதவ வேண்டும்.

ஈழத்தில் இலக்கிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. சில வருடங்களுக்கு முன்னர் இருந்த மந்த நிலை நீங்கி இலக்கிய வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் ஏற்பட்டுள்ளது. எழுத்தாளர்களின் முயற்சியினாலும் இலக்கியப் படைப்புகள் சில நூல் வடிவில் வந்து கொண்டிருக்கின்றன. இன்னும் நல்ல தரமான இலக்கியம் படைக்கப்பட்டிருப்பினும் அவை நூல் வடிவில் வரக்கூடிய வாய்ப்பு அதிகம் இல்லை. இலக்கியப் படைப்புகள் நூல் வடிவில் வந்தால்தான் எழுத்தாளர்களுக்கு உற்சாகம் ஏற்படும். நல்ல தரமான இலக்கியங்களைப் படைக்கும் ஆர்வமும் தோன்றும். பேராசிரியர் கூறியதுபோல் எழுத்தாளர்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து தரமான இலக்கியப் படைப்புக்களை நூல்வடிவில் கொண்டு வருவதற்கு ஒரு ஸ்தாபனத்தை அமைத்துக் கொண்டால் எழுத்தாளர்களுக்கு மட்டுமல்ல நாட்டின் முன்னேற்றத்துக்கும் நல்லது. வெளியுலகில் நமது நாட்டின் மதிப்பும் பெருகும். இந்தியாவிலும் இதர பல நாடுகளிலும் இத்தகைய ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டு சிறந்த பணிபுரிந்து வருகின்றன. சில நாடுகளில் அந்நாட்டு எழுத்தாளரின் சிறந்த படைப்புக்களை அரசாங்க ஆதரவுடனும் ஸ்தாபனங்கள் நூல் வடிவில் வெளியிடுகின்றன.

நமது நாட்டிலும் நல்ல தரமான இலக்கியங்களைப் படைப்பதற்கு எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக சாகித்திய மண்டலம் அமைக்கப்பட்டு வருடாவருடம் சிறந்த நூல்களுக்கென சிறிய தொகை பரிசாக வழங்கப்பட்டு வருகிறது. இந்தச் சபை சரியாக இலக்கியப் படைப்புகளை எடைபோடுவதில்லை என்று குறை கூறப்படுவதுமுண்டு. எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் சிறிய தொகைகூட இத்தகைய சபைகளின் செலவுக்காகப் பிரிக்கப்பட்டுவிடுகிறது. யாழ்ப்பாணப் பிரதேசக் கலாமன்றம் இப்போது முதன்முறையாக இலக்கியத்துக்கென ஒரு குழு அமைத்திருக்கிறது. இதுபோல் இதர பிரதேசக் கலாமன்றங்களும் இலக்கியத்துக்கெனத் தனித்தனிக் குழுக்களை அமைத்து அவைகள் ஒவ்வொன்றிலும் இருந்து ஒவ்வொரு பிரதிநிதிகளைத் தெரிந்து மத்திய குழு ஒன்றை அமைத்து எழுத்தாளர்களினதும், அரசாங்கத்தினதும் உதவியையும் ஒத்துழைப்பையும்பெற்று, தரமான இலக்கியப்படைப்புக்களை நூல்வடிவில் கொண்டு வந்து எழுத்தாளர்களுக்கு ஊக்கமளிக்கலாம். இந்தக் குழுக்கள் சிங்களத்திலுள்ள சிறந்த நூல்களைத் தமிழிலும், தமிழிலுள்ள சிறந்த நூல்களைச் சிங்களத்திலும் மொழி பெயர்த்து வெளியிடுவதன் மூலம் இலக்கிய வளர்ச்சிக்கும் தேசிய ஒற்றுமைக்கும் பெரிதும் உதவமுடியும்.

# அரசியல், மொழி, பொருளாதார பிரச்னைகளுக்குத் தீர்வு

## சாவகச்சேரி எம். பி. கூறும் யோசனை

சாவகச்சேரி, செவ்.

விவசாயத்தில் ஊக்கமும் முன்னேற்றமும் உள்ள வாலிபனை மணமுடித்து வாழ்வோமே தவிர அடிமைத் தொழிலான அரசாங்க உத்தியோக மாப்பிள்ளையை மணம் முடிப்பதில்லை யென்ற முன்னேற்ற எண்ணம் இளம் பெண்களிடம் தோன்றும்வரை நம் மத்தியில் தோன்றியுள்ள அரசியல், மொழி, பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண இயலாது.

சாவகச்சேரி இளைஞர் முன்னேற்றக் கழகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தலைமைதாங்கிப் பேசிய சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

விவசாயத்தின் கௌரவத்தை அறியாததின் காரணமாகவே நமது நாட்டில் விவசாயத்துறையை படித்த வாலிபர்களும் இளம்பெண்களும் இழிவாக எண்ணுகின்றனர். இன்று அகில உலகத்தின் முதன்மை பெறும் நாடுகள் விவசாயத்தின் பயனாகவே உயர் அடைந்தன என்ற உண்மையை இவர்கள் அறிய வேண்டும். கடந்த மாதம் விஸ்வமடு படித்த வாலிபர் குடியேற்றத் திட்டத்தில் குடியேறியுள்ள வாலிபர்கள் மிழகாய் சாகுபடியில் மாத்திரம் ஆளுக்கு ரூபா 7000 மிகுதப்படுத்தி, தமது பாஸ் புத்தகத்தில் சேமித்து வைத்திருக்கிறார்கள். இவ்வித தொகை உழைப்பினை ஓர் அரசாங்க உத்தியோகத்தர் சேமிப்பதானால் எட்டு வருடங்களாவது வேண்டும்.

இன்று மலைபோல் உயர்ந்துள்ள எம் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண விவசாயம் நன்கு உதவும். அரசாங்கம் இன்றைய உணவுப்பொருள் பற்றுக்குறையைச் சமாளிக்க விவசாயிகளையே நாடியுள்ளது.

தமிழர் பெரும்பாலும் விவசாயிகளாகவும் பல ஏக்கர் விவசாயநிலத்தின் சொந்தக்காரராகவும் இருந்தால் அரசாங்கம் அவர்களை அவ்விதம் விவசாயியை கெஞ்சி மண்டியிடும் நிலைவளரும். எனவே நாம் விவசாயத் துறையில் ஈடுபாடுகொண்டு சுதந்திரமனிதர்களாக வாழ வேண்டும். இதன் மூலம் அரசாங்கச் சலுகைகளை தவிர்த்து முன்னேறமுடியும்.

## மரணவிசாரணை அதிகாரியாகநியமனம்

அளவெட்டி, செவ்.

மயிலிட்டி கிராமசபைப் பகுதியை அடுத்த கட்டுவனைச் சேர்ந்த ஓய்வு பெற்ற விதானையார் திரு. நல்லதம்பி நாகலிங்கம் மயிலிட்டி கிராமசபைப்பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரியாகநியமிக்கப்பட்டுள்ளார்.

## இன்றைய பலன்

[20-3-68]

புதன்கிழமை

[பங்குனி மீ 7 உ]

திதி- ஷஷ்டி பகல் 12-06 மேல் ஸப்தமி

நட்சத்திரம்- அனுஷம் காலை 9-05 மேல கேட்டை

ராகுகாலம்- 12-19-1-49

சுபநேரம்- 4-49—6-19

இன்று பிறந்தவர்களுக்குசித்திரைநிலவைப் போல் இவ்வருடம் புதன் சிந்தும் நிகழ்ச்சிகளை அளித்து உங்களை மெய்சிலிர்க்கவைக்கும். காதலர்களுக்கு இவ்வாண்டு கன்னல்போல் சுவை தரும். தொழில்துறையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமுண்டு. பெரியோர்கள் ஆசியும், பெற்றோர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். அவசரத்தைத்தவிர்க்கவும்.

மேஷம்-சூழ்ச்சி வலைவிரிக்கும் உஷாராகவிரு.

ரிஷபம்- இதயத்தின் அடித்தளத்தில் இன்பத்தின் தாக்குதல்.

மிதுனம்- நட்பில் வெடிப்பு, நாசவேலை நடக்கும்.

கடகம்- புண்ணிய விருப்பு, புதிய தொடர்புகள்.

சிம்மம்- வாழ்வில் ஏற்றம், இடமாற்றம் விரும்பின் சிறப்பான நாள்.

கன்னி- உற்சாகமிகுதி, வருவாயும் உயரும்.

துலாம்- போனது போகட்டும் பொறுமை வேண்டும்.

விருச்சிகம்- மக்கள் பிணி, மனப்போராட்டம்.

தனுசு- நிதியில் அபிவிருத்தி, நிம்மதி பிறக்கும்.

மகரம்- உறங்காத உள்ளம், உறுமும் பகை

கும்பம்- கல்வி நலன், கவர்ச்சி மிகுதி.

மீனம்- தித்திக்கும் நிகழ்ச்சி, திணறவைக்கும் பரிவு.

## ஒலிபரப்ப கோருகிறார்

கொழும்பு, செவ்.

பார்லிமெண்டில் பேசப்படும் பேச்சுக்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அஞ்சல் செய்யவேண்டுமென்று கோரும் பிரேரணை ஒன்றை ஜனப்பிரதிநிதிகள் சபையில் கொண்டு வருவதற்கு தம்பதெனியா எம்.பியான திரு. ஆர் ஜி. சேனநாயகா முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

## முதற்பிரிவில் சித்திபெற்றார்

உடுப்பிட்டி, செவ்வாய்

கரணவாய் தெற்கைச் சேர்ந்த டாக்டர் திரு. ஆழ்வாப்பிள்ளை திருச்சிற்றம்பலம் சென்னைப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட வைத்திய இறுதியாண்டுப் பட்டப் பரீட்சையில் (எம். பி. பி. எஸ்.) முதல் பிரிவில் சித்தி அடைந்துள்ளார். இவர் காலஞ்சென்ற பேராசிரியர் திரு. சி. ஆழ்வாப்பிள்ளையினதும், கரணவாய் மகாவித்தியாலய ஆசிரியை திருமதி பார்வதி ஆழ்வாப்பிள்ளையினதும் புதல்வராவர்.

இவர் வடமராட்சி வர்த்தக மாணவர் சங்கத்தின் போஷகர்களில் ஒருவராகவும், உடுப்பிட்டித் தமிழ் மன்றத்தின் தலைவராகவும் பணிபுரிகின்றார்.

## ஆசிரியர்சங்க அங்கத்தவர் கோரிக்கை

அளவெட்டி, செவ்வாய்

இடமாற்றம் ஓய்வு, தனியார்பாடசாலையில் சேவை செய்தல் காரணமாக அங்கத்துவத்தை இழத்தல் சம்பந்தமாக இருக்கும் விதியைத்திருத்தி இடமாற்றம் ஓய்வு, தனியார் பாடசாலையிற் சேவை அல்லதுவேறு நிர்வாக சபையினரின் திருப்திக்கேற்ற காரணம் காட்டும் பட்சத்தில் தமது அங்கத்துவத்தை மீண்டும் பெற சபை அனுமதி வழங்கவேண்டுமென திரு. செ. சிவசம்புநாதன் என்பவர் வடமாகாண ஆசிரியர் சங்க சகாய நிதியின் எட்டாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரேரணை கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இம்மாதம் 28-ம் திகதி காலை நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திரு ச. பஞ்சநாதஐயரால் கொண்டுவரப்படவிருக்கும் மற்றொரு பிரேரணை வருமாறு:

ஓர் அங்கத்தவர் இன்னுமொரு தரத்திற்கு மாறுவது சம்பந்தமான சகாய நிதிச் சட்டத்தின் 7-ம் விதி பகுதி (பி) ல் உள்ள அங்கத்துவத்தைப்பெற்ற 3 வருடங்களுள் என்றிருப்பதைத் திருத்தி 5 வருடங்களுள் அவ்வித தரமாற்றத்திற்கு நிர்வாக சபையிடம் விண்ணப்பிக்கஇச்சபை அனுமதி வழங்கவேண்டும்.

## நாடும் நடப்பும்

கச்சதீவுத் திருநாள் நாளை ஆரம்பமாகிறது. திருநாள் நெருங்கநெருங்க கச்சதீவுப் பிரச்னை பற்றிய வதந்திகளும், செய்திகளும் பல உருவங்களை எடுக்கின்றன. 'வம்பர் மகாசபை'களில் கம்பியில்லாத் தந்தி மூலம் வந்த செய்திகளைச் சிலர் வெளுத்து வாங்குகிறார்கள்!

ஃ ஃ ஃ

தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் "தமிழ்நாடு" என்ற பத்திரிகையில் அதன் நிருபர் ஒருவர் கச்சதீவுக்குப் படகில் சென்றதாகவும், அங்கு போய் இறங்குவதற்கு முன்னரே இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சிலர் அவரிடம் வந்து, 'கச்சதீவு எங்களுக்குத்தான் சொந்தம்; நீங்கள் இனிமேல் இப்படி இங்கு வரக்கூடாது'' என்று மிரட்டியதாகவும் அந்த நிருபர்எழுதியிருக்கிறார்; கச்சதீவை இலங்கைக்கு விட்டுவிட்டால் இந்தியாவுக்குப் பல வழிகளிலும் நஷ்டம் என்றும், குறிப்பாக நல்ல மீன்கள் தொகையாக கிடைக்குமிடம் கச்சதீவுப்பகுதி தான் என்றும் அந்த நிருபர் எழுதுகிறார்.

கச்சதீவில் மனித சஞ்சாரமில்லையென்று கூறுவது தவறென்றும், தாம் சென்ற சமயம் கச்சதீவுக் கரையோரப்பகுதியில் சுமார் 500 மீனவர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்றும் கூறும் அந்த நிருபர் கச்சதீவில் ஐந்து தென்னை மரங்களும், ஒரு பனையும், பழச்செடிகள், மூலிகைகள், கத்தரிச் செடிகளும் இருப்பதாகத்தெரிவிக்கிறார். அங்கு சென்று அடிக்கடி தங்கியிருக்கும் இந்திய மீனவர் குடும்பங்களை இலங்கை இராணுவத்தினர் பயமுறுத்துவதாகவும் அந்த நிருபர் எழுதுகிறார்.

ஃ ஃ ஃ

கச்சதீவுத் திருநாள் நெருங்கநெருங்க இலங்கை அரசாங்கமும், பொலிஸ் இராணுவ, சுங்கப்பகுதி அதிகாரிகளும் சில கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். கள்ளக்கடத்தலையும், சட்டவிரோதக்குடியேற்றத்தையும் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவாம். இவைகளைத் தடுக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் இதற்காகக் கச்சதீவுக்கும் நமக்குமுள்ள உரிமைகளை தடுக்கக் கூடிய முறையில் காரியங்கள் செய்வது நல்லதா? கச்சதீவு மூலமாகத்தான் கள்ளக்கடத்தலும் சட்டவிரோதக் குடியேற்றமும் நடைபெறுகிறதா? தென்னிலங்கைக் கரையில் இப்படியான காரியங்கள் நடைபெறவில்லையா? இதர பகுதிகளில் தானும் இச் சட்டவிரோத செயல்களை நமது வீரர்கள் தடுத்து நிறுத்தி விட்டார்களா?

—ஊர்சுற்றி

## சேனநாயகா சிரார்த்ததினம்

கொழும்பு, செவ்

இலங்கையின் முதல் பிரதமரான திரு. டி. எஸ். சேனநாயகாவின் சிரார்த்த தினத்தை இம்மாதம் 22-ம் திகதி கொண்டாட இலங்கை இந்திய முன்னேற்றச் சங்கம் ஏற்பாடுகள் செய்துள்ளது.

இதனையொட்டி பகல் 11 மணிக்கு முகத்துவாரம் ஸ்ரீ விக்னேஸ்வரசுவாமி ஆலயத்தில் பிரார்த்தனை நடைபெறும் அன்னதானமும் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்கைக்கு ஆதரவா, எதிர்ப்பா?

## ஆர். ஜி. யிடம் சிறிமா கேள்வி

கொழும்பு, செவ்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கூட்டு முன்னணி உருவாக்கிய பொதுக் கொள்கைத் திட்டத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவரும் தம்பதெனியா எம். பி. யுமான திரு ஆர். ஜி. சேனநாயக்கா ஆதரிக்கிறாரா எதிர்க்கிறாரா என்பதுபற்றி திட்டவட்டமாகப் பதில் தெரிவிக்குமாறு அவரிடம் எதிர்க்கட்சித்தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கேட்டிருக்கிறாராம்.

கூட்டணியின் பொதுக் கொள்கைத்திட்டத்தை அங்கீகரிப்பதற்கான பொதுக் கூட்டம் இம்மாதம் 28-ம் திகதி கண்டி போகம்பறை மைதானத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

டாலி வீதியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்காரியாலயத்திலிருந்து மோட்டார் பவனியொன்று புறப்பட்டு ஹொறகொல்லையில் பண்டாரநாயக்கா சமாதியில் அஞ்சலி செலுத்திவிட்டு கண்டி போய்ச்சேர ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாம்.

## மகாவலி......

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

கங்கையைத் திருப்பும் திட்டத்தின் முதல் கட்ட வேலைகள் அடுத்த வருட முற்பகுதியில் ஆரம்பிக்கப் படவிருப்பதாக காணி அமைச்சு தெரிவித்துள்ளது.

மகாவலி கங்கைத்திட்டம் பற்றி சமீபத்தில் கொழும்பு நூதனசாலை மண்டபத்தில் பூகோள சாஸ்திரப் பேராசிரியர் திரு. கே. குலரத்தினம் பேசுகையில் மகாவலி கங்கையின் உற்பத்தி பற்றியும் அது பாய்ந்து செல்லும் இடங்கள் பற்றியும் விபரித்துவிட்டு கடலில் சென்று வீணாகும் இந்த நீர் அறுபது லட்சம் ஏக்கர் நிலத்துக்கு பாசனம் செய்யப்பட்டு நாட்டின் சுய தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய நெல்லை உற்பத்தி செய்ய உதவுமென்றும் கூறினார்.

பத்து வருடங்களுக்குமுன் உருவாக்கப்பட்ட இத்திட்டம் சில பல காரணங்களால் செயல்படுத்தமுடியாமல்போனதென்றும் அவர் சொன்னார்.

## எஸ். ஜே. வி வரவில்லை

யாழ்ப்பாணம், புதன்

காங்கேசன்துறை பட்டின சபையை நகரசபையாக்குவது சம்பந்தமாக கொழும்பில் உள்ளூராட்சி அமைச்சரின் காரியாலயத்தில் இம்மாதம் 16-ம் திகதி மாலையில் அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில் காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கலந்துகொள்ளவில்லையெனத் தெரிகின்றது.

இம்மகாநாட்டில் காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. ஏ. வி. சதாசிவம், தெல்லிப்பழை கிராமசபைத் தலைவர் திரு. எஸ். சிதம்பரநாதன், மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. எஸ். அருணாசலம், காங்கேசன்துறை பட்டினசபை 5-ம் வட்டார அங்கத்தவர் திரு எஸ். சிவனடியார் மட்டுமே பங்குபற்றினர்.

காங்கேசன்துறை எம். பி. திரு செல்வநாயகம் பங்குபற்றியதாக நேற்று வெளியான செய்தி தவறானது.

## இ போ ச......

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

கள் கிரமத்துக்குள்ளாக வேண்டி நேரிட்டது.

கோண்டாவில் பஸ் டிப்போ வளவுக்குள் இந்த சங்கங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் கூட்டம் நடத்த வழங்கப்பட்டிருந்த அனுமதி நேற்றுமுன்தினம் திடீரென மறுக்கப்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள் நேற்று அதிகாலை வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்கம், இலங்கை பஸ் தொழிலாளர் கழகம், ஸ்ரீலங்கா ஜாதிக பிரவாஹன சேவகா சாமிதியா, இலங்கைமோட்டார் தொழிலாளர் சங்கம், ஐக்கிய இலங்கை போக்குவரத்து தொழிலாளர் சங்கம், தேசிய ஊழியர் சங்கம் ஆகிய தொழிற் சங்கங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டனர்.

## இந்திய......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தது. எனவே கடல் உரிமையை இந்தியா விரிவுபடுத்துவதை இலங்கை ஏற்றுக்கொள்ளாது.

இரு நாடுகளின் பேச்சுக்கும் தேவைப்படும் நட்பு, சமரச மனப்பான்மையுடன் சிக்கலைத்தீர்க்க முற்பட்டால் அநேகமாக அடுத்த மாதத்தில் நடைபெறவிருக்கும் இலங்கை-இந்திய அதிகாரிகளின் கூட்டத்தில் கச்சதீவு பிரச்னையைத் தீர்க்க முடியும்.

இலங்கைப்பிரதமர் டட்லி சேனநாயகா குறிப்பிட்டது போல், இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் கச்சதீவு இலங்கையைச் சேர்ந்தது என்று நிரூபிக்க இலங்கை வரலாற்றுச் சான்றுகளை வைத்திருக்கிறது.

## கண்டியில் ஜேர்மன் தூதரக கிளை

கண்டி, செவ்வாய்

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் தூதரகக் கிளையொன்று கண்டியில் திறக்கப்படவிருக்கிறது.

திரு. கே. வி. என். டி சில்வா இக் கிளைக்குப் [பொறுப்பாளராவார்]. கண்டியிலுள்ள இன்னிஸ் ஹோட்டலில் இத்தூதரகம் இயங்கும்.

# பூனைகளைப் பராமரிக்க 60 ஆயிரம் பவுண்

## ஆனால் மகனுக்கு 3 ஆயிரம்

லண்டன், மார்ச் 19

பூனைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு வெள்ளைக்கார பெண்மணி 60,000 பவுண் நன்கொடை வழங்கியிருக்கின்றார்.

இப்பெண்மணி தமது அந்தியகாலத்தில் எழுதிய உயிலில் பூனைகளை பராமரிக்கும் சங்கத்துக்கு 60,000 பவுணும் தனது புதல்வனுக்கு 3 ஆயிரம் பவுணும் ஒதுக்கியுள்ளார்.

பணக்காரரான இப்பெண்மணி தமது வாழ்நாளில் ஓடுகாலியாகத் திரியும் பூனைகளைச் சேகரித்துப் பராமரிப்பதிலும் கவனிப்பாரற்ற பூனைகளை கொண்டு வந்து கொடுப்பவர்களுக்கு பரிசுகள் வழங்குவதிலும் பெரிதும் ஈடுபட்டுவந்துள்ளார்.

### இலங்கையிலுள்ள

# மலாயன் பென்சனர்களுக்கு எவ்வாறுபணம் கிடைக்கிறது

## அரசாங்கம் ஆராயப் போகிறது

கொழும்பு, செவ்.

மலாயன் பென்ஷன் பெறுபவர்களில் அனேகருக்கு மலாயா டாலர்கள் கள்ளத்தனமாக வருவதாகவும் அதனால் இலங்கைக்குப் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் வெளிநாட்டுச் செலாவணியில் நஷ்டம் ஏற்படுவதாகவும் அரசாங்கத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதன் காரணமாக இலங்கையிலுள்ள மலாயன் பென்ஷன்காரருக்கு எப்படி பணம் கிடைக்கிறது என்பதையும் அப்பணம் கிடைப்பதில் மோசடிகள் எதுவும் நடைபெறுகிறதா என்பது பற்றியும் அரசாங்கம் விசாரணைகள் நடத்த முடிவுசெய்திருக்கின்றது.

இலங்கையிலுள்ள மலாயன் பென்ஷன்காரர் மலாயாவில் தமக்கு வரும் பென்ஷன் தொகைகளை பெற்றுக்கொள்ள அங்குள்ள தமக்கு வேண்டியவர்களுக்கு உரிமை வழங்கியிருப்பதாகவும் அவர்கள் பெறும் பணத்தை இங்குள்ளவர்களுக்குக் கள்ளத்தனமாக அனுப்புவதாகவும் அப்படி அனுப்பப்படும் மலாயன் டாலர்கள் இலங்கையில் மூன்று மடங்கு அதிக விலைக்கு விற்கப்படுவதாகவும் அதனால் இலங்கைக்குப் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்படுவதாகவும் அரசாங்கம் கருதுகின்றது.

## யாழ். சென்றல்...

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

இது வெற்றியீட்டியது பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியுடனை போட்டி மட்டும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இதுவரை சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் சென்றல் கல்லூரிக்கும் இடையில் 69 போட்டிகள் நடைபெற்றுள்ளன. 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து நடைபெற்று வரும் இப்போட்டியில் 27 போட்டிகளில் சென்ஜோன்ஸ் கல்லூரி வெற்றியீட்டியுள்ளது. 18 போட்டிகளில் சென்றல் கல்லூரி வெற்றியீட்டியுள்ளது. 1948-ம் ஆண்டும், 1961-ம் ஆண்டும் போட்டிகள் நடைபெறவில்லை. கடந்த வருடப் போட்டி மழை காரணமாக இடையில் நிறுத்தப்பட்டது. ஏனைய போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. (கா நி)

## யாழ்ப்பாணம்

1-ம் பக்கத்தொடர்ச்சி

வருட்பயன் முதலான வகுப்புக்களும், கல்லூரிகளின் சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்துவார்கள்,

விபரங்கள் வேண்டுவோர் மெய்கண்டார்கழகச் செயலாளரோடு தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

## ஒலிபரப்பாகும்

வவுனியா, செவ்.

வருகிற சித்திரை வருடப் பிறப்பன்று வவுனியாவில் நடைபெறவிருக்கும் வருடப்பிறப்புக் கொண்டாட்டங்களை ஒலிபரப்புவதற்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒழுங்குகள் செய்துவருவதாக அறியப்படுகிறது.

## விவசாயிகள் ஏமாற்றம்

சங்கானை, செவ்வாய்

உப உணவுப் பொருட்களில் ஒன்றாகிய வெங்காய உற்பத்திக்கு அரசாங்கம் அதிக சலுகைகள் கொடுத்து அதன் உற்பத்தியை பெருக்கிஓர் அளவில் சுய தேவை பூர்த்தியடைந்து வரும் இவ்வேளையில் வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள கமக்காரர் தாங்கள் விளைவித்த வெங்காயங்களை அங்கத்துவம் வகிக்கும் தங்கள் பகுதி கூட்டுறவு சங்கங்களுக்கே கொடுக்கமுடியாத நிலையை அடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

விவசாயிகள் கொண்டு செல்லும் வெங்காயத்தை சங்கத்திலுள்ள ஊழியர் சிலர் சாக்குப்போக்கு சொல்லி திருப்பி விடுகின்றனராம்.

தொல்புரத்திலும் விவசாயிகள் இவ்வித கஷ்டத்துக்குள்ளாகியிருப்பதாக தெரிகிறது.

## பற்றறி தட்டுப்பாடு

சங்கானை, செவ்வாய்

பற்றறிகள் தட்டுப்பாட்டால் வலி. மேற்குப் பகுதியில் பாவனையாளர் தமது றேடியோக்களை உபயோகிக்கமுடியாமலும் டோர்ச் லைட்டுகளை உபயோகிக்கமுடியாமலுமிருக்கிறார்கள்.

## தம்பிதிருமணத்தை..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அண்ணனின் சொல்லைக் கேளாது அவருடைய தம்பியார் தான் காதலித்த பெண்ணையே விவாகம்செய்தாரெனவும் இதனால் மனமுடைந்த தமயன்கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டதாகவும் அறியப்படுகிறது.

## கைதடி, மிருசுவில் கி. ச. தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்

யாழ்ப்பாணம், புதன்

கைதடி கிராமசபைத் தேர்தலுக்கான அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் நேற்றுத்தாக்கல் செய்யப்பட்டபோது இரண்டாம் வட்டாரத்துக்கு வைரவன் செல்லன் போட்டியின்றித் தெரியப்பட்டார்.

ஏனைய வட்டாரங்களில் போட்டியிடுபவர்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:—

1-ம் வட்டாரம் இராமலிங்கம் செல்லையா: ஆறுமுகம் கந்தையா. 3-ம் வட்டாரம் எஸ் வேலாயுதபிள்ளை, எஸ் சிதம்பரன், தம்பு செல்லத்துரை, 4-ம் வட்டாரம் எஸ் என் ஜெயதாஸ், ஆர் துரையப்பா, கே ஐயங்கன், 5-ம் வட்டாரம் ஐ தனஞ்செயன், தம்பையா சங்கரப்பிள்ளை, எஸ் கணபதி, கந்தையா சிதம்பரப்பிள்ளை. 6-ம் வட்டாரம் கே சிவலை, கே முத்துக்குமாரசாமி (கா. நி.)

### மிருசுவில் கி.ச. தேர்தல்

மிருசுவில் கிராமசபைப் புதிசதேர்தலுக்கான அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் நேற்று தாக்கல் செய்யப்பட்டன.

12 வட்டாரங்களில் 4வட்டாரங்களுக்கு அபேட்சகர்கள் போட்டியின்றித் தெரியப்பட்டனர். விபரங்கள் பின்வருமாறு:

1-ம் வட்டாரம்: சின்னையா ஐயம்பிள்ளை, கார்த்திகேசு கணபதிப்பிள்ளை, வேலுப்பிள்ளை சிவஞானசுந்தரம், 2-ம் வட்டாரம் வி செல்லையா, வி அம்பலவாணர், 3-ம் வட்டாரம் எஸ் பொன்னுத்துரை (போட்டியின்றித்தெரிவு) 4-ம் வட்டாரம் பொன்னுக்கோன் அப்பாக்குட்டி டேவிட், அருளப்பு ஞானப்பிரகாசம், 5-ம் வட்டாரம் சின்னத்தம்பி நடராஜா (போட்டியின்றித் தெரிவு), 6-ம் வட்டாரம் ரி பாலகிருஷ்ணன், கே கந்தசாமி, 7-ம் வட்டாரம் கே குலசேகரம்பிள்ளை (போட்டியின்றித் தெரிவு) 8-ம் வட்டாரம் எஸ் கந்தசாமி, வி கந்தையா, 9-ம் வட்டாரம் ஆர் இராசையா, கே இராசதுரை, 10-ம் வட்டாரம் சின்னப்பு சின்னத்தம்பி, (போட்டியின்றித் தெரிவு) 11-ம் வட்டாரம் எம் எஸ் சி சரவணமுத்து, எஸ் பாலசிங்கம், ஏ எஸ் சிவராசா, 12-ம் வட்டாரம் எஸ் முத்துக்குமாரு, எம் சரவணமுத்து. (கா. நி.)

## திருட்டுப்போன பொருட்கள்

யாழ்ப்பாணம், புதன்

தைப்பொங்கல் தினத்தன்று அரியாலையில் களவு போனதாகக் கூறப்படும் சுமார் 1000 ரூபா பெறுமதியான பொருட்களை நேற்றிரவு ஆரியகுளம் சந்தியிலுள்ள கடையொன்றிலிருந்து பொலிஸார் கைப்பற்றினார்கள்.

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பகுதி பொலிஸார் இக் கடையிலிருந்து களவு போனதாகப் புகார் செய்யப்பட்ட இரு 'டிரான்சிஸ்டர்' றேடியோக்களையும், பெற்றோல்மாக்ஸ் ஒன்றையும் இங்கிருந்து கண்டுபிடித்தனர். சந்தேகத்தின் பேரில் தனேஸ்வரன், சுப்பிரமணியம், பாக்கியராஜா ஆகிய மூவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் சந்தேக நபர்களை ஆஜர் செய்த போது இவர்களை இம்மாதம் 26-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார். (கா. நி)

## கா். யூ. வாலிபர் சங்க உறுப்பினர்

யாழ்ப்பாணம், புதன்

துன்னாலை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கக்கூட்டம் திரு. எஸ். ஜெயராஜா தலைமையில் நடைபெற்றது. திரு. அ. அப்பாத்துரை தலைவராகவும், திரு. பா. தவயோகம் காரியதரிசியாகவும் திரு. இ. சின்னத்தம்பி தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதர் கழகங்களின் முக்கிய பணிஎன்ன?

யாழ்ப்பாணம், புதன் "நமது நாட்டிலுள்ள மாதர் கழகங்கள் இன்று ஆற்றவேண்டிய முக்கிய பணி உணவு உற்பத்தியைப் பெருக்குவதேயாகும். கிராமங்களில் உள்ள மாதர் கழகங்கள் தரிசாக இருக்கும் நிலத்தைப் பண்படுத்தி விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்தல்வேண்டும். பால் மாவுக்காக மக்கள் திண்டாடும் இவ்வேளையில் நல்ல மாடுகளை வளர்த்து பாலெடுத்து மக்களுக்கு விநியோகிப்பதே நாட்டுக்குச் செய்யும் நல்ல பணியாகும். நகரப்புறங்களில் அமைந்திருக்கும் மாதர் கழகங்கள் வேறு நல்ல பணிகளில் ஈடுபடலாம்."

இவ்வாறு புனிதவளன் மாதர் கழகத்தைக் குருநகரில் அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசிய நீர்வேலி மாதர் சங்கத் தலைவி திருமதி வேதவல்லி கந்தையா பேசும்போது குறிப்பிட்டார்.

'செக்கோஸ்லவேக்கியா, சோவியத் நாடு, ஜேர்மனி ஆகிய நாடுகளிலுள்ள மாதர்கள் இன்று துரித முன்னேற்றமடைந்துவருவதற்கு அவர்களது இன்றைய சமூக அமைப்பே காரணமாக இருக்கிறது' எனச் செல்வி க. பூரணம் பேசும்போது தெரிவித்தார்.

திருமதி மாகிரட் சவரிமுத்து, புனிதவளன் விளையாட்டுக்கழகத் தலைவர் அ. யேசுதாசன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

வண. பிதா பெனற் கொன்ஸ்ரெரைன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. (கா. நி.)

## மாதர் கழக உறுப்பினர்

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் புனிதவளன் மாதர்கழக நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரியப்பட்டுள்ளனர்.

போஷகர்கள்: வணபிதா. பெனற் கொன்ஸ்ரென்ரைன், திருமதி வேதவல்லி கந்தையா, திருமதி மாகிறெற் சவரிமுத்து, புலவர் செல்வி க. பூரணம், தலைவி: திருமதி அகஸ்ரின் அல்லியம்மா, உபதலைவி: திருமதி அலெக்ஸிஸ் பிலோமினா, செயலாளர்: செல்வி கிறகோரி மேரிஆன், உபசெயலாளர்: செல்வி சேவியர் பரமேஸ்வரி, பொருளாளர்: செல்வி மாரியாம்பிள்ளை யோசெப்பின் 5 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது. (கா. நி.)

## குடியேற்றத்திட்ட வாலிபருக்கு விவசாயப்படை கைகொடுக்கிறது

யாழ்ப்பாணம், புதன் 400 விவசாயப்படை வீரர்களைச் சேர்த்துக்கொள்வதற்கென ஆரம்பிக்கப்பட்ட விசுவமடு விவசாயப்படை முகாமில் ஒருசில தினங்களுக்குள் இதுவரை சுமார் 200க்கு மேற்பட்ட விவசாயப்படை வீரர்கள் சேர்த்துள்ளதாகத் தெரியவருகின்றது. இதில் கிளிநொச்சி, கரவெட்டி, வட்டக்கச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்தே அதிகமாக விவசாயப்படை வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சேர்ந்த விவசாயப்படை வீரர்கள் விசுவமடுக் குடியேற்றத் திட்ட வாலிபர்களுக்கு வாய்க்கால் மூலம் தண்ணீர் கொடுக்கும் வேலையிலிடுபட்டுள்ளனர். ஒட்டிசுட்டானில் ஆரம்பிக்கப்பட்ட விவசாயப்படை முகாமில் இதுவரை சுமார் 100 வீரர்கள்வரை சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களும் குடியேற்றத்திட்டங்களுக்கு வாய்க்கால் மூலம் தண்ணீர் பாய்ச்சும் வேலையில் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்.

வாய்க்கால் வெட்டும் விவசாயப்படைகளுக்கு நீர்ப்பாசன இலாகாவும் உதவிபுரிந்து வருவதாகத் தெரிகிறது. தற்சமயம் 26 நாள் வேலைக்கு நாளொன்றுக்கு 2ரூபா வீதம் பெறும் இவ்வீரர்கள் 6 மாதத்தின் பின்னர் ரூபா 2-50ம் பதவி உயர்வும் பெறவிருப்பதாக இதுசம்பந்தப்பட்ட முக்கிய அதிகாரி தெரிவித்தார். தற்பொழுது விவசாயப்படை வீரர்களுக்கு உணவும், உடையும், தேவையான காலணியும், பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

விசுவமடு விவசாயப்படையினர் சேர்ந்து ஒருசில தினங்களுக்குள் இதுவரை சுமார் ஒரு மைல் நீளத்துக்குக் கூடுதலான வாய்க்கால் வெட்டியுள்ளார்களெனத் தெரிவிக்கப்படுகிறது. இம்முகாமுக்கு இரு ஜீப் வண்டிகளும், ஒரு டிரக் வண்டியும் அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேலும் வண்டிகள் வரவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வி. நி.]

## 'லாபத்தில் விவசாயிகளும் பங்கு பெறவேண்டும்'

அளவெட்டி, செவ். "ஒரு விவசாயி பயிரிட்ட வெங்காயத்தை விளைபொருளாக்கி அதை அறுவடை செய்வதற்குள் அவன் எத்தனையோ கஷ்டநஷ்டங்களை அடையவேண்டியிருக்கின்றது. அப்படிகஷ்டப்பட்டு அறுவடை செய்த வெங்காயத்துக்கு அரசாங்கம் விதித்த விலை போதாது. இந்த நிலையில் சங்கத்துக்கு தமது வெங்காயத்தை விற்பனவு செய்யும்போது 1 அந்தருக்கு 10ரூத்தல் கழிவுகொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இதனால் சங்கம் லாபமடைய ஏதுவாகின்றது. இந்த லாபத்தில் விவசாயிகளும் பங்கு கொடுக்கவேண்டும் அல்லது கழிவு 10 ரூத்தலுக்கும் பணம் கொடுக்கவேண்டும்"

இவ்வாறுசெனட்டர் திரு. சு. நடராசா அளவெட்டி பயிர்செய்கைக்குழுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அளவெட்டி மகாஜன வாசிகசாலை மண்டபத்தில் அளவெட்டி பயிர்ச் செய்கைக் குழுத்தலைவர் திரு. த. சுப்பிரமணியம் தலைமையில் "வெங்காயம் உற்பத்தியாளர் கஷ்டம்" பற்றிய கருத்தரங்குமகா நாடுநடைபெற்றது.

இம்மகாநாட்டில் கமத்தொழில் சேவை ஆணையாளர் திரு. கே. சபாரத்தினம் ஆனையிறவுத்தடை முகாமை நீக்கினால் வெங்காய விலை வீழ்ச்சியடையும். ஆனபடியால்ஆனையிறவுத் தடையை நீக்கக் கூடாது எனக் கருத்துத் தெரிவித்தார்.

விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர்திரு. க. ந. ஜெயசீலன் வெங்காயத்துக்கு ஏற்படும் நோய்களைப்பற்றியும் அவற்றைத் தடை செய்யும் முறைகளைப்பற்றியும் விளக்கிக் கூறினார்.

## மரண தண்டனை நிறைவேற்றம்

கொழும்பு, செவ்வாய் பெமினா ஹெந்னதிகே வின்சன்ட் வில்மன் பீரிசுக்கும், மஹபதுகே ஸயமன் பீற்றர் பெர்னாந்துவுக்கும் உயர்நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மரண தண்டனை இம்மாதம் 15-ம், 16-ம் திகதிகளில் நிறைவேற்றப்பட்டது.

## கச்சதீவு செல்ல ரூபா 2.

நெடுந்தீவு, செவ். நெடுந்தீவிலிருந்து கச்சதீவுக்குச் செல்லும் யாத்திரிகர்களிடம் 2 ரூபா மட்டும் அறவிடுவதென இங்குள்ள மோட்டார் படகுக்காரர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தீவுக்கு வந்து கச்சதீவு செல்பவர்களுக்குரூ3-50 மட்டும் செலவாகுமென்றும் யாழ்ப்பாணத்திலிருந்து கச்சதீவுக்குச் சென்றுவர 7 ரூபா மட்டும் செலவாகுமென்றும் படகுக்காரர் கள்மேலும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கச்சதீவுக்குச்சென்று திரும்ப 20ரூபா செலவாகும் என பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியையிட்டு படகுக்காரர் ஆச்சரியம் அடைந்தனர்.

## ரயில்வே ஜெனரல் மனேஜருக்கு இலங்கை இந்தியர் சங்கம் கோரிக்கை

நல்லூர். செவ்வாய் வடபகுதியிலிருந்து கப்பல் மூலமாக இந்தியாவுக்குப் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் இங்கிருந்து தலைமன்னார் வரை ரயில் மூலம் செல்லும்போது பலவித கஷ்டங்கள் அனுபவித்து வருவதாகவும்இதனை நிவர்த்தி செய்ய ஏற்ற நடவடிக்கை உடன் எடுக்குமாறும் யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை இந்தியர் சங்கம் ரயில்வே ஜெனரல் மனேஜரைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இது சம்பந்தமாக இலங்கை இந்தியர் சங்கம் ரயில்வே ஜெனரல் மனேஜருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது;

காங்கேசன் துறையிலிருந்து தலைமன்னார் வரை இரவுநேர ரயில்மூலம் செல்லும் பிரயாணிகள் அதிக அசௌகரியங்களை அனுபவித்து வருகிறார்கள்.

இப் பிரயாணிகளுக்கென ஒரேயொரு பெட்டியேஒதுக்கப்பட்டுள்ளதால் பிரயாணிகள் அதிக நெரிசலுக்குள்ளாகவேண்டியிருக்கிறது.

இந்தப் பெட்டியில் போதிய வெளிச்சம் இரவு நேரத்தில் இல்லாதிருப்பது மற்றொருகுறை. காற்றுடிகளின் வசதியுமில்லாதிருப்பதால் பிரயாணிகள் சுகாதார வசதியற்று பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையிலிருக்கிறார்கள். இவ்வித நெரிவும் இருட்டும் நிலவுவதால் பிரயாணிகள் சில சமயங்களில் தமது பொருள்களை இழந்து தவிக்கவும் வேண்டி நேரிடுகிறது. இந்த நிலை இப்போது அதிகரித்துக் கொண்டு வருகிறது.

இந்தியாவுக்கு அதிகமான பிரயாணிகள் பிரயாணம் செய்யும் திங்கட்கிழமைகளிலும் வியாழக்கிழமையிலாவது பிரயாணிகள் சௌகரியமாகப் பிரயாணம் செய்யக்கூடிய விதத்தில் ஏற்றஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

வடபகுதி

## விவ்சாயப் படையில் சேருமாறு கிளிநொச்சி எம். பி. அழைப்பு

கிளிநொச்சி, புதன் வடபகுதி விவசாய படைக்கு மேலும் ஆயிரம் வாலிபர்களைச்சேர்க்கவேண்டுமென, கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் வற்புறுத்தியுள்ளார்.

விசுவமடு விவசாயப்படையில் 200 வாலிபர்கள் சேர்க்கப்பட்டனர். ஆனால் முத்தையன்கட்டு விவசாய முகாமில் 50 வாலிபர்கள் மட்டுமேசேர்க்கப்பட்டுள்ளனர்.

வடபகுதி விவசாய முகாமுக்கு ஆள் சேர்க்கும் முதல் கட்டம் முடிவுற்றுள்ளது. இம்மாதம் 29-ம், 30-ம், 31-ம் தேதிகளில் மீண்டும் ஆள் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக கிளிநொச்சி எம். பி. தெரிவித்தார்.

விவசாயப்படையில் சேர விரும்பும் வாலிபர்கள் 5-ம் வகுப்பிற்கு மேல் படித்தவர்களாகவும், திருமணம் செய்யாதவர்களாகவும், 18 வயதிற்கும், 30 வயதிற்குமிடையிலுள்ளவர்களாகவும் இருக்கவேண்டுமென்றும் விவசாயப்படையில் சேர்ந்தபின் இலவசஉணவு, உடையுடன், நாளொன்றுக்குமுதல் 6 மாதத்திற்கு 2 ரூபா சம்பளம் வழங்கப்படுமெனவும் பின்னர் 2-50 வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**புதன்கிழமை 20-3-68**

**செய்திகள்:** காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

**344 மீற்றர் & 61 மீற்றர்** காலை 6-30 நமதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற் சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு. 7-30 குரல் வகை, 8-00 இசை வேளை,. 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்** பகல் 12-00 தொழிலாளர்வேளை, 1-00 மாதர் கேட்டவை.

**344 மீற்றர் & 61 மீற்றர்** மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விளையாடுமசபா.

இரவு 6-15 நேயர்விருப்பம், 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு— எஸ். சரவணபவன், 9-45 உரைச்சித்திரம், 10-00 தேர்ந்தஇசை.

## அமைச்சரின் செலவு

### 'ஜனதின' மதிப்பீடு

கொழும்பு, செவ். ஸ்தல ஸ்தாபன மந்திரி யாழ்ப்பாணத்திற்கு ரெயிலில் செல்லும்போது, அவரது காரும், ரெயிலில் கொண்டுசெல்லப்படுகிறது. ஸ்தலஸ்தாபன அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டபணமே ரெயில்மூலம் மந்திரியின் கார் கொண்டுசெல்லப்படுவதற்கு செலவிடப்படுகிறது.

ஜனதின என்ற சிங்கள தினசரி இம்மாதம் 16-ம் தேதி வெளியிட்ட முன்பக்கத் தலைப்புச் செய்தியில் மேற்கண்டவாறு வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: அரசாங்க ஊழியர்களின் கார்கள், அமைச்சின் செலவில் கொண்டு செல்லப்படலாம். திரு. திருச்செல்வம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினரல்லா. அவர்ஒருசெனேட்டர். அவரது காரை ரயில் மூலம் யாழ்ப்பாணத்திற்கு [illegible] 3045 ரூபா செலவாகிறது.

யாழ்ப்பாணத்தில்

## குடும்பக் கட்டுப்பாடு கருத்தரங்கும் பொருட் காட்சியும்

யாழ்ப்பாணம், புதன் இலங்கை குடும்பக்கட்டுப்பாட்டுச்சங்கத்தின் ஆதரவில் குடும்பக்கட்டுப்பாட்டு பற்றிநாடுபூராவும் நடாத்தப்பட்டுவரும்கருத்தரங்கும், பொருட்காட்சியும் நாளை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் ஆரம்பமாகவிருக்கின்றது. சர்வதேச குடும்ப நலன்புரிச்சங்கத்தைச்சேர்ந்த திருமதி ராமாராவ் லேடி இதனை ஆரம்பித்து வைப்பார்.

நாளை மாலை 3 மணிக்கு இது ஆரம்பமாகும். மாலை 3-30 மணியிலிருந்து 5-30 மணிவரை குடும்ப நலம்பற்றிய கருத்தரங்கம் நடைபெறும். 6 மணிக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேரிணன் அபயசேகரா தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும்,

இப் பொதுக்கூட்டத்தில் யாழ். சுகாதார சேவை அதிகாரி டாக்டர் எஸ். இராசரத்தினம், லேடி ராமாராவ் இந்தியகுடும்பக்கட்டுப்பாட்டுச் சங்கத்தைச் சேர்ந்த ஆர். பி. குணவால, பாகிஸ்தான் குடும்பக்கட்டுப்பாட்டுச் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் திருமதி சதீனு பசலபய், நேபாளம் குடும்பக்கட்டுப்பாட்டுச் சங்கத்தைச்சேர்ந்த திருமதி சுசிலா தாபா, ஆப்கானிஸ்தான் காபுல் சுகாதாரப்பகுதி குழந்தைகள் பராமரிப்பு ஆலோசகர் டாக்டர் கபார் அசீஸ் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்.

நாளையும், மறுதினமும் தொடர்ந்து நடைபெறவிருக்கும்இவ்விழாவில் படக்காட்சியும் காண்பிக்கப்படும். [கா. நி]

## நோயாளர் கஷ்டம்

கொம்பனித்தெரு, செவ் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்களில் அநேகமானோர் ஏமாற்றத்துடன் வீடு செல்லவேண்டி நேரிடுவதாகத் தெரிகிறது.

இங்குள்ள வைத்தியர்கள் காட்டும் அசிரத்தையை காரணமாகவே இவ்வித நிலை ஏற்படுகிறதாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ். ஆஸ்பத்திரி

# தாதிகள் விடுதியிலும் உணவு, இட பிரச்னை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் இருக்கும் நோயாளிகளுக்கு மட்டுமன்றி இங்குள்ள தாதிகள் விடுதியில் வசிக்கும் தாதிகளுக்கும் கூட சாப்பாட்டுப் பிரச்னையும் இடப்பிரச்னையும் தற்போது தலைதூக்கியுள்ளதாம். இவ் விஷயம் தற்போது ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

சுமார் 70க்கும் மேற்பட்ட ஆஸ்பத்திரி பிரதம தாதிகள் இருக்கும் இரு விடுதிகளிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் 8 தாதிகளுக்கு வெளி விறாந்தையில கட்டில் போட்டு படுக்கை வசதி செய்யவேண்டிய நிலையும் வைத்திய அதிகாரிக்கு ஏற்பட்டுள்ளது. இரு விடுதிகளில் ஒன்று பழைய கட்டடமாக இருப்பதாலும் போதிய இடவசதி இல்லாதிருப்பதாலும் மேல்மாடியைக் கொண்ட ஒரு புதிய கட்டடத்தை இக் காணியில் அமைக்கத் உத்தேசித்துள்ளதாகவும் ஆஸ்பத்திரி வைத்தியம்பிரிண்டன் நேற்று தெரிவித்தார்.

இதுதவிர இங்குள்ள தாதிகளுக்கு தினமும் ஒரேசாப்பாடு வழங்குவதிலும் ஏற்பட்ட பிரச்னை தற்போது உயர்தர அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் குறிப்பிட்டசில தாதிகள் வெளியிலிருந்து அடுத்தமாதம் முதல் சாபபாடு பெறவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (கா. நி)

## வாழ்த்து செய்தி

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை ஜனப்பிரதிநிதிகள் சபையின் உபசபாநாயகராக உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தெரியப்பட்டதைபாராட்டு முகமாக கோண்டாவில் இழக்கு சனசமூகநிலையமும் இந்து இளைஞர் மன்றமும் வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இனமத ஐக்கியத்தைப் பலப்படுத்தும் நோக்கமாக சிறுபான்மைச் சமூகத்தவரான தமிழருக்கும் உயர் பதவிகளை அளிக்க முன்வந்த தேசிய அரசாங்கத்திற்கும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காது ஆதரவு நல்கிய எதிர்க்கட்சிக்கும் தமிழ் மக்கள் என்றும் நன்றிதெரிவிக்கக் கடமைப்பட்டவர்களென இப்பாராட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கா. நி]

## கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம். வியாழன்.

சண்டிலிப்பாய் கிராஸ் கோப்பர் விளையாட்டுக் கழகத்திற்கும், பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. க்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கிராஸ் ஷோப்பர் 20 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. [கா. நி]

## சனசமூக நிலைய உறுப்பினர்

யாழ்ப்பாணம், புதன்

கொற்றாவத்தை மத்திய ஜனசமூக நிலையத்தின் புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-

தலைவர்:- திரு. வ. இளையதம்பி உபதலைவர்:- திரு சி. கிருஷ்ணபிள்ளை, காரியதரிசி:- திரு. வே. பெருமையினார், உபகாரியதரிசி:- திரு. க. கிருஷ்ணபிள்ளை, தனாதிகாரி:- திரு. ச. முருகேசு, உபதனாதிகாரி:- திரு. க. கந்தவனம், விளையாட்டுச் செயலாளர்:- செல்வன் பொ. சண்முகலிங்கம், கணக்குப் பரிசோதகர்கள்:- திரு. இ. செல்வராஜா, திரு. இ. கந்தசாமி. (கா. நி)

## 4நாள் விடுதலை

திருகோணமலை, செவ்.

வர்த்தக ஸ்தாபனங்களிலுள்ள அலுவலக குமாஸ்தாக்களுக்குத் தமிழர் புதுவருட தினத்தின் போது தொடர்ந்து 4நாட்கள் விடுமுறை கிடைக்கப் போகின்றது. ஏப்ரல் 12, 13, 14, 15 ஆகிய நான்கு தினங்களும் இவர்களுக்குவிடுமுறை நாட்களாகும். பெரியவெள்ளி, புதுவருடப் பிறப்பு, ஈஸ்டர் பண்டிகை, போயா தினம் இவையாவும் ஒருமித்து வருவதினாலேயே இந்த நீளமான விடுமுறை இருக்கின்றது.

## பருத்தித்துறை எம். பி. யின் யோசனை

புலோலி, செவ்

'உள்ளூர் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பெண்மணிகளும், ஆண்களும் உள்ளூரில் உற்பத்திசெய்யும் உடைகளையே அணிய வேண்டும்' என்று அம்பலை நெல்லண்டை நெசவு நிலைய முதலாவது ஆண்டுவிழாவின் போது பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட பருத்தித்துறை எம். பி திரு. க. துரைரத்தினம் பேசுகையில் கூறினார்.

மேற்படி நெசவு நிலையத்தின் வளர்ச்சியைக்காண தாம் பெருமகிழ்ச்சி கொள்வதாகவும் அவர் கூறினார்.

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. என். நடராசாவும், வடமராட்சி காரியாதிகாரி ஜெயகாந்தனும் பேசினர்.

## உற்பத்தியில் சாதனை

புன்னாலைக்கட்டுவன், செவ்வாய்

உரும்பராய் வடக்கைச் சேர்ந்த திரு. எஸ். வீரசிங்கம் என்பவர் தமது தோட்டத்தில், 3 அந்தர் உருளைக்கிழங்கு பயிரிட்டு 40அந்தர் கிழங்கு அறுவடை செய்துள்ளார். இச் சாதனையை விளைபொருள் உற்பத்தித் திணைக்களத் தலைவரும் உரும்பராய் இளைஞர் விவசாயக் கழகமும் பாராட்டியுள்ளன.

# காங்கேசன்துறை வட்டார பாடசாலைகள் போட்டி முடிவு

அளவெட்டி, செவ்

காங்கேசன்துறை வட்டாரத்தைச் சேர்ந்த பல்வேறு பாடசாலைகளுக்கிடையேயான உடற் பயிற்சிப் போட்டிகள் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

வட்டார வித்தியாதரிசி திரு. சிமான்பிள்ளை இப் போட்டிகளுக்குத் தலைமை வகித்து உடற் பயிற்சி வீரர்களின் அணிவகுப்பு மரியாதையைஏற்றுக்கொண்டார்.

போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு திரு சிமான்பிள்ளை சான்றிதழ்கள் வழங்கினார்.

இப்போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரம் வருமாறு:—

19வயதுக்குட்பட்டவர்கள்: ''ஏ'' பிரிவு பெண்கள் இளவாலை கொன்வென்ற் பாடசாலை.

''ஏ'' பிரிவு ஆண்கள் — மல்லாகம் இந்துக கல்லூரி. தெல்லிப்பளை யூனியன் கல்லூரி.

16 வயதுக்குட்பட்டவர்கள்: 'ஏ' பிரிவு பெண்கள்- காங்கேசன்துறை அமெரிக்கன் மிஷன் பாடசாலை. 'ஏ' பிரிவு ஆண்கள்- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, காங்கேசன்துறை அமெரிக்கன் மிஷன் பாடசாலை.

13 வயதுக்குட்பட்டவர்கள்: 'ஏ' பிரிவு பெண்கள் காங்கேசன்துறை அமெரிக்கன் மிஷன் பாடசாலை. 'ஏ' பிரிவு ஆண்கள்- மல்லாகம் இந்துக கல்லூரி.

19 வயதுக்குட்பட்டவர்கள்: 'பி' பிரிவு பெண்கள்- மாதகல் சென். தோமஸ் கல்லூரி.

16 வயதுக்கு உட்பட்டவர்கள் பெண்கள்- மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை, 'பி' பிரிவு ஆண்கள் - கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம்.

13 வயதுக்குட்பட்டவர்கள்: 'பி' பிரிவு பெண்கள்- மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை, மாதகல் றோமன் கத்தோலிக்க பாடசாலை.

## உரும்பிராய் வெற்றி

புன்னாலைக்கட்டுவன், செவ்வாய்

உரும்பிராய் விளையாட்டுக் கழகத்திற்கும், தெல்லிப்பளை கூட்டிங்ஸ்ரார் கழகத்திற்குமிடையே நடந்த கிரிக்கெட் போட்டியில் உரும்பராய் கோஷ்டி 3விக்கற்றுகளாலும், 9ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

## இரு பிரிவிலும் வெற்றி

அளவெட்டி செவ்வாய்

கோப்பாய் வட்டாரத்தைச்சேர்ந்த பல்வேறுபாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. வசாவிளான் மகாவித்தியாலயம் இரு பிரிவிலும் வெற்றியீட்டியது.

3 வருடத்தில்

# செத்தல் மிளகாய்க்கு 12 கோடி செலவாகியது

யாழ்ப்பாணம், புதன்

1964ம் ஆண்டிலிருந்து 1966ம்ஆண்டுக்குட்பட்ட 3 வருட காலஎல்லையிலும் இலங்கை அரசாங்கம் செத்தல் மிளகாய் இறக்குமதிக்குமட்டும் 11 கோடி 90 லட்சத்து 87ஆயிரத்து 852 ரூபாவை வெளிநாட்டுக் செலாவணியாகச்செலவிட்டுள்ளது. இம் மூன்று வருடத்திலும் 10 லட்சத்து 61 ஆயிரத்து788 அந்தர் நிறையுள்ளமிளகாய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

1964-ம் வருடத்தில் 4,64,70,859 ரூபா பெறுமதியான 4,25,383 அந்தரும், 1965-ம் வருடத்தில் 3,00,06,819 ரூபாபெறுமதியான 2,78,111 அந்தரும், 1966-ம் வருடத்தில் 4,25,50,174 ரூபா பெறுமதியான 3,58,294 அந்தர் நிறையுள்ள செத்தல் மிளகாய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

இது தவிர இந்த மூன்று வருடத்திலும் உருளைக் கிழங்கு இறக்கு மதிக்கு 6 கோடி 74 லட்சத்து29ஆயிரத்து 991 ரூபா அந்நியச் செலாவணியாக செலவிடப்பட்டுள்ளது 1964-ம்,65-ம், 66-ம் ஆண்டுகளில்முறையே 14,71,456 அந்தர், 10,74,164 அந்தர், 12,19,652 அந்தர் நிறையுள்ள கிழங்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் செத்தல் மிளகாய் இறக்குமதிக்கான வெளிநாட்டுச் செலாவணியை அரசாங்கம் முற்றாக நிறுத்தியுள்ளது. வடபகுதியிலுள்ள குடியேற்றத் திட்டங்களில் சாகுபடிசெய்யப்பட்டிருக்கும் செத்தல் மிளகாய் அடுத்தமாத நடுப்பகுதியில் விற்பனைக்கு வரும் போது நாட்டுக்குப் போதுமானதாக இருக்குமெனவும் 1970-ம் ஆண்டில் நாடுசெத்தல்மிளகாய் உற்பத்தியில் தன்னிறைவு பெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறதுகாநி

## நாவலர் நினைவு நாடகப் போட்டி

குரும்பசிட்டி, புதன்

நாவலர் நினைவு நாடகப் போட்டியின் இரண்டாவது தினம் வலி-வடக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்திரு. சாம். வடிவேலு தலைமையில் இன்று புதன்கிழமை மாலை 6-30 மணிக்கு ஆரம்பமாகவிருக்கின்றது. குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலைய ஆதரவில் நிகழும். இந்நாடக விழா மகாதேவா வித்தியாசாலை மண்டப ''சோமசுந்தரப்புலவர்'' அரங்கில் நடைபெற விருக்கின்றது.

இன்றுபோட்டியில் கலந்துகொள்ளும் நாடக மன்றங்களும் மேடையிடப்படும் நாடகங்களின் விபரமும் பின்வருமாறு:—

சுன்னாகம் சிவாஸ் நாடக மன்றம் - ''காதலா? கடமையா?'', பெரியவிளான் இளங்கேஸ்வரி இளைஞர் மன்றம் - ''மலர்ந்த வாழ்வு'' காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றம் - ''மான மறவன்'', எழுது மட்டுவாள் நடேசர் தமிழ் மன்றம் - ''தியாகி'', அல்வாய்மனோகரா சனசமூக நிலையம் — ''அழிவுப் பாதையிலே'', பருத்தித்துறை [illegible] நாடக மன்றம் [illegible] பதக்கம்''.

இந்திய தூதரக

# திரைப்பட சுருள்கள் நடைபாதையில் விற்பனை

## பொலிஸார் புலன் விசாரணை

கொம்பனித்தெரு, செவ்.

இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்துக்குச் சொந்தமான திரைப்பட சுருள்களை கொழும்புக் கோட்டையில் நடைபாதை வியாபாரி ஒருவர் விற்பனை செய்து கொண்டிருந்ததை தூதரகத்தைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் நேரில் கண்டாராம்.

இத்தூதரகத்துக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்படி அதிகாரி குறிப்பிட்ட இடத்துக்குச் சென்றபோது இச்சுருள்கள் விற்பனை செய்யப்பட்டுக்கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த திரைப்படச் சுருள்கள் ஒவ்வொன்றையும் 8 ரூபாவிலிருந்து இருபது ரூபாவரை அவர் விற்பனை செய்துகொண்டிருந்தார் எனவும் கூறப்படுகிறது.

இதனை நேரில் சென்று பார்வையிட்ட அதிகாரி கோட்டை பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொண்டதன் பேரில் பொலிஸார் இதுபற்றி விசாரணை நடத்தி வருகின்றனர். நடைபாதை வியாபாரியை பொலிஸார் முதலில் விசாரணை செய்தனர்.

## உடற்பயிற்சிப் போட்டி

அளவெட்டி, செவ்.

காங்கேசன்துறை வட்டாரத்தைச் சேர்ந்த பல்வேறு பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

வட்டார வித்தியாதிபதி திரு. சிமான்பிள்ளை இப் போட்டிகளுக்குத் தலைமை வகித்து உடற்பயிற்சி வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்குத் திரு. சிமான்பிள்ளை சான்றிதழ்களை வழங்கினார்.







Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ். சென்றல் மைதானத்தில் இன்று கிரிக்கட் போட்டி

## சென். ஜோன்ஸ் கல்லூரி



இருப்பவர்கள் [இடமிருந்து வலம்]: கே. எஸ். மகாலிங்கம், எம். சுரேந்திரா, எஸ். எம். மூத்ததம்பி [கப்டன்] ரி. விபுலானந்தா, எஸ். டி. குலநாதன், என். வாமதேவன்.

நிற்பவர்கள் [இடமிருந்துவலம்]: டி. எஸ். மில்ஸ், ஜே. நவரத்தினராசா, பி. ஜெயரத்தினம், எம். தெய்வேந்திரம், ஆர். ஏ. கூல், வி. என். அரசரத்தினம், பி. கணேசலிங்கம், என். சிவபாலன்.

## மத்திய கல்லூரி



இருப்பவர்கள் [இடமிருந்து வலம்]: எஸ். சுகுமார், எம். ஜீவானந்தன், ஜி. எஸ். சாந்திகரன், பி. பாலேந்திரா [கப்டன்], டி. புரட்சிதாசன், [உதவி காப்டன்] கே. நரேந்திரன், வி. ரி. சுந்தரலிங்கம்,

நிற்பவர்கள் [இடமிருந்து வலம்]: எம். ஜெயகுமார் டி. திருகுமார், கே. ஜெயரட்ணகுமார், எம். தில்லையம்பலம், கே. ப வானந் ஆர். ராஜசிங்கம், கே. பரமசிவம்.

## சென்ஜோன்ஸ்-27- சென்றல்-18 எவரும் வெற்றி பெறுதது-13

— நமது காரியாலய நிருபர் எஸ். திருச்செல்வம் —

வடபகுதி கிரிக்கெட் 'விசிறிகள்' ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சென். ஜோன்ஸ் — சென்றல் கல்லூரிகளின் 70-ம் வருடாந்த கிரிக்கெட் போட்டி இன்று காலை 10-30 மணிக்கு ஆரம்பமாகின்றது. யாழ்ப்பாணம் சென்றல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கும் இப் போட்டி நாளைமாலை 5-45 மணிவரை தொடர்ந்து நடைபெறும்.

### பறக்கும் வர்ணக் கொடிகள்

போட்டி ஆரம்பமாவதற்கு முன்னரே இதற்குக் கட்டிய கூறுவது போல வீதிகளிலும், கார்களிலும், சைக்கிள்களிலும் இரு கல்லூரிகளினதும் வர்ணக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன, இரு கல்லூரி மாணவர்களினதும் 'சேட்டு'களிலும் கல்லூரிச் சின்னங்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. கல்லூரி பழைய மாணவர்களும், பெற்றோர்களுமே இப் போட்டியைச் சிறப்பாக நடத்துவதில் முக்கிய பங்கு கொண்டு உழைத்து வருகின்றனர். மாணவர்கள் மத்தியில் மட்டுமன்றி மாணவிகள் மத்தியிலும் கூட இப்போது இதுதான் பேச்சாகவிருக்கிறது.

இரண்டு நாட்களும் போட்டி காலை 10-30 மணியிலிருந்து 12-30 மணிவரையும்; 2-00 மணியிலிருந்து 3-45 மணிவரையும், 4-00 மணியிலிருந்து 5-45 மணிவரையும் நடைபெறும். போட்டி முடிவில் சிறந்த பந்தெறி வீரனுக்கு திரு. டபிள்யூ. பத்மநாதன் சலஞ்ச் கிண்ணமும், சிறந்த துடுப்படி வீரனுக்கு சி. ஏ டபிள்யூ. எட்வர்ட்ஸ் சலஞ்ச் கிண்ணமும், சிறந்த பீல்டருக்கு டாக்டர் எச் டபிள்யூ. தம்பையா சலஞ்ச் கிண்ணமும், 'ஆல்ரவுண்டருக்கு' மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் அளிக்கும் சலஞ்ச் கிண்ணமும் வழங்கப்படும். வெற்றி பெறும் கோஷ்டிக்கும் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் அளிக்கும் சலஞ்ச் கிண்ணம் பரிசாக வழங்கப்படும்.

### ஒழுங்கை நிலைநாட்ட

யாழ். மாவட்டத்தின் தலைசிறந்த இரு கிரிக்கெட் கோஷ்டிகளும் கலந்து கொள்ளும் இப் போட்டியில் அசம்பாவிதம் எதுவும் ஏற்படாமல் ஒழுங்கை நிலைநாட்ட வடபகுதி உதவி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சி. தவராஜா தலைமையில் விசேஷ பொலிஸ்கோஷ்டி ஒன்று இந்த கடமை யாற்றும். நான்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும், 7 பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர்களும், 12 பொலிஸ் சார்ஜன்டுகளும், 74 பொலிஸ் கான்டபிள்களும் இங்கு கடமையாற்றுவார்கள். இது தவிர சாதாரண உடையணிந்த பொலிஸாரும் இங்கு கண்காணிப்புச் செலுத்துவர்.

காடைத்தனமாக நடத்தல், வெடி கொளுத்துதல், கூட்டமாகவும், வாகனங்களிலும், வீதிகளிலும் நின்று கோஷமிடுதல், ஆகியன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மதுபோதையில் நிற்கும் மாணவர்களையும், வாலிபர்களையும் சட்ட நடவடிக்கைக்குட் படுத்த பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### சென்றல் முடிவுகள்

இவ்வருடத்தில் இதுவரை மத்திய கல்லூரி 7 பாடசாலைகளுடனும், சென். ஜோன்ஸ் கல்லூரி 6 பாடசாலைகளுடனும் விளையாடியுள்ளது. மத்திய கல்லூரி விளையாடிய போட்டிகளில் தெகிவிப்பளை யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணம்சென் பற்றிக்ஸ்ரூபதிரித்துறைஹாட்லிகல்லூரி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியனவற்றுடனான போட்டி வெற்றி தோல்வின்றி முடிவடைந்தது. கண்டி சென்சில்வஸ்டர்ஸ், குருநாகல் மாலியதேவாக் கல்லூரிகளுடனான போட்டியில் முறையே 9 விக்கெட்டுகளாலும், 6 விக்கெட்டுகளாலும் தோல்வியடைந்தது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை 55 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

### சென்ஜோன்ஸ் முடிவுகள்

சென்ஜோன்ஸ் கல்லூரி 6 போட்டிகளில் ஒன்றிலும் தோல்வியடையில்லை. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை 10விக்கெட்டுக்களாலும் மானிப்பாய் இந்துக் கல்லூரியை இன்னிங்ஸாலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை 77 ஓட்டங்களாலும் கண்டி சென் சில்வஸ்டர்ஸ் கல்லூரியை 136 ஓட்டங்களாலும் சென். பற்றிக்ஸ் கல்லூரியை 64 ஓட்டங்களாலும்

[5-ம் பக்கம் பார்க்க]

### சென். ஜோன்ஸ் கல்லூரி

| பெயர்கள் | 1-ம் ஆட்டம் | 2-ம் ஆட்டம் |
|---|---|---|
| 1. எஸ். எம். மூத்ததம்பி [காப்டன்] | | |
| 2. ரி. விபுலானந்தா | | |
| 3. எம். சுரேந்திரா | | |
| 4. எஸ். டி. குலநாதன் | | |
| 5. என். வாமதேவன் | | |
| 6. கே. எஸ். மகாலிங்கம் | | |
| 7. ஜே, நவரட்ணராஜா | | |
| 8. என். சிவபாலன் | | |
| 9. எம். தெய்வேந்திரா | | |
| 10. டி. எஸ். மில்ஸ் | | |
| 11. பி. கணேசலிங்கம் | | |

### சென்றல் கல்லூரி

| பெயர்கள் | 1-ம் ஆட்டம் | 2-ம் ஆட்டம் |
|---|---|---|
| 1. பி. பாலேந்திரா [காப்டன்] | | |
| 2. டி. புரட்சிதாசன் | | |
| 3. ஜி. எஸ். சாந்திகரன் | | |
| 4. கே. நரேந்திரன் | | |
| 5. எம். ஜீவானந்தன் | | |
| 6. கே. பரமசிவம் | | |
| 7. எம். தில்லையம்பலம் | | |
| 8. எஸ். சுகுமார் | | |
| 9. ரி. தயாசிங்கம் | | |
| 10. ஆர். இராஜசிங்கம் | | |
| 11. எம். ஜெயகுமார் | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org